# மஹான்
# மணி ஐயர்

"சுதேசமித்திரன்" உதவி ஆசிரியர்

(காலஞ்சென்ற)

கே. சுந்தரராகவன், பி. ஏ.

எழுதியது

சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ்

கனம் ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார்

முன்னுரையும்

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

சிறப்புரையும் கொண்டது

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
சென்னை-1

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை-4

1946

காபிரைட்] [ரூ. 1-0-0

மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் - விரிவான சரித்திரம் - இந் நூலாசிரியர் இயற்றியது

மஹாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் முன்னுரையும், மகா மகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் சிறப்புரையும் கொண்டது.

விலை ரூ. 1 - 4 - 0

24464

மூர்த்தி பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை.
For The Alliance Co., Madras - 4
Q.H.M.S. 109 - C. 1000 - Aug. 46

# ஞாபகார்த்தம்

உள்ளம் அறிந்தாள் உவந்துபணி ஆற்றினாள்
விள்ள வரிய வினயத்தோ—டறுசுவை
இன்பமளித் தேகினான் லீலா நினைவினுக்கிஃ
தன்பின் அடையாளமாம்.

இவ்வாசிரியரின்
வேறு நூல்கள்

---

1. டாக்டர் உ. வே. சாமிநாதையர்
2. ராய் பகதூர் பி. அனந்தாசார்லு
3. ஸர். வி. பாஷ்யம் ஐயங்கார்

# முகவுரை

(முதல் பதிப்புக்கு எழுதியது.)

இப்புத்தகத்தை நான் எழுதத் துணிந்ததற்கு மூன்று காரணங்கள் முக்கியமானவை. ஒன்று, அக்டோபர் மாதம் மணி ஐயரின் ஜன்மதின நூற்றாண்டு விழா நிறைவெய்தியது; இரண்டாவது, இதுவரை அவ்வுத்தமரின் சரிதை பூரணமாக வெளிவராதது; மூன்றாவது, என் ஆப்தரும், அல்லயன்ஸ் கம்பெனி சொந்தக்காரருமான ஸ்ரீ குப்புஸ்வாமி ஐயர், மிகுந்த சிரத்தையுடன் இதை எழுதும்படி என்னை உற்சாகப் படுத்தியது. தென்னிந்தியப் பெருமக்களின் சரிதைகள் நம்மிடை அதிகம் பரவவேண்டும் என்ற நோக்கத்துடன் இப்புத்தகம் எழுதப்பட்டிருப்பதால், இம்முயற்சியைத் தமிழ் நாட்டார் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

என் வேண்டுகோளுக்கிணங்கி, தம் தகப்பனாரைப் பற்றிய சில விஷயங்களை எனக்கு அறிவித்த ஸ்ரீமான் எம். எஸ். ராமஸாமி ஐயருக்கும், பல அவசர அலுவல்களுக்கிடையே இப்புத்தகத்தைப் படித்து இதற்கு மதிப்பு மிகுந்த முன்னுரையை அளித்த நீதிபதி கனம் ஸ்ரீமான் கே. எஸ் கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்களுக்கும், சிறப்புத் தரும் சிறப்புரை உதவிய தமிழறிஞர் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

இது விஷயமாக எனக்குப் பல வகையிலும் பேருதவியாயிருந்த என் அன்பர் ஸ்ரீ இ. வா ஜகந்நாதையரவர்களுக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்புத்தகத்தை மிகவும் நேர்த்தியான முறையில் பிரசுரித்திருக்கும் அல்லயன்ஸ் கம்பெனி அதிபரின் நன் முயற்சியையும் நல் நோக்கத்தையும் நான் பாராட்டுவதும் உசிதமாகும்.

'பரோடா ஹவுஸ்'
மயிலாப்பூர்

கே. சுந்தரராகவன்.

# முன்னுரை

## கனம் ஜஸ்டிஸ்

## ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் எழுதியது

தென்னிந்தியப் பெரியார்களுடைய வரலாறுகளையும் வாழ்க்கை விசேஷங்களையும் சுருக்கமாகத் தமிழ் நாட்டாருக்கு எடுத்துச் சொல்ல முன்வந்திருக்கும் இச்சிறு நூலின் ஆசிரியரும், இதனை வெளியிடும் பிரசுராலயத்தாரும் நமது பாராட்டுக்குப் பூரண உரிமையுள்ளவர்கள்.

கீர்த்தியிலும் கௌரவத்திலும் டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயரைக் காட்டிலும் மேலானவர் இம்மாகாணத்தில் வேறு ஒருவரும் இல்லை. உண்மையில் அவர்தாம் தென்னாட்டின் தொண்டு கிழவர் குருட்டு நோக்கங்களும் குறுகிய மனப்பான்மையும் அதிகரித்திருக்கும் இந்நாளில், நம் முன் நிற்கும் பல பிரச்சினைகளைத் தீர்க்க அவர் அப்போதே கொண்ட கருத்துகளும், அதற்காக அவர் உழைத்த விதமும் நம் தேச பக்தர்களுக்குப் பேருபகாரமாயிருக்கும் என்பது நிச்சயம். அவரது தலைமுறை இப்போது மறைந்து விட்டது; அவரது ஞாபகமும் காலப் போக்குக் காரணமாகச் சற்று மங்கியிருக்கிறதாயினும், அது மறையவே மறையாது; நிரந்தரமாக அது நீடித்திருக்கும்.

டாக்டர் சுப்பிரம்ணிய ஐயர் - மணி ஐயர் என்றுதான் அவரை எல்லோரும் அறிவர் - எந்த அம்சத்தைக் கொண்டு கவனித்தாலும், இந்தியாவின் உண்மைப் புதல்வர் என்பதில் சந்தேகம் இல்லை. பலதிறப்பட்ட தமது உயர்ந்த வாழ்க்கையில், நம் பண்டைக் கலைகளி லும் நாகரிகத்திலும் காணப்படும் உத்தமமான அம்சங் களை அவர் பூரணமாகப் பயன்படுத்திக் கொண்டவர். ஆத்மார்த்த விசாரத்தில் கீழ்த்திசையினர் காட்டும் தத்துவ ஞானத்தையும், எந்த விஷயத்திலும் மேனாட் டார் மேற்கொள்ளும் உத்ஸாகத்தையும் ஊக்கத்தையும் ஒன்றுக்கொன்று முரண்படாத விதமாகத் தமது வாழ்க்கையில் ஒன்றுபடுத்தி வாழ்ந்துவந்தவர் அவர். இவ்விரு நாகரிகங்களிலும் சிறந்தவையும் அவசிய மானவையுமான சில அம்சங்களைக் கிரஹித்துக்கொண்டு, தோஷங்களை விலக்கியவரும் அவர்தாம் என்று நிச்சய மாகக் கூறலாம். சுதேசத்தைச் சேர்ந்தது என்ற காரணத்தைக்கொண்டு, அவர் எதையும் உடனே ஒப்புக் கொள்ள மாட்டார்; பலாத்காரக்கொள்கை காரணமாக உதிக்கும் வெறுக்கத்தக்க லோகாயதத்திலிருந்து மானிட வர்க்கத்தைப் பாதுகாத்து, உலகத்தின் க்ஷேமத்திற்கு அது உதவும் என்பதைத் தமது தீர்க்க ஆலோசனையினால் கண்டுபிடித்த பின்புதான், அவர் அதற்குத் தமது மனமுவந்த ஆதரவை அளிப்பார். அவரது சரிதையும் அவருடைய சொற்களும் இப்போதும் நம் மக்களின் உள்ளத்தில் நம்பிக்கையையும், நல்ல நோக்கத்தையும் ஊட்டவல்லன. உலக நன்மையை யுத்தேசித்து இந்தியா தன் கடமையைச் செய்யவேண்டி யிருக்கிறது. இதனால், யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பல நாடுகளுக்கு அமைதியும் ஏற்படும். அவர் காலத்திலேயே ஒரு யுத்தம் நடந்தது.

தமது வீட்டில் இருக்கையிலும் சரி, பொதுஜன சேவையில் ஈடுபட்டிருந்த சமயத்திலும் சரி, அவர்

நியாயத்தையும் நெறியையும் தைரியமாக எடுத்துச் சொன்னார். இயற்கையிலேயே காருண்யமும் உதார குணமும் நிரம்பியவர்; ஏழை எளியவர்களுக்கு மனங் கோணாமல் அவர் உதவிவந்தார்.

தலைநகரில் தொழில் நடத்த வெளியூரிலிருந்து வரும் வக்கீலுக்கு உச்சஸ்தானத்தை எட்டுவது சுலபமல்ல; ஆனால் மணி ஐயர் தம்முடைய அறிவுத் திறத்தினாலும், உலக விவகாரங்களிலிருந்த அனுபவத்தினாலும், தைரியத்தினாலும் தொழிலில் முதன்மை பெற்றார். சென்னை ஹைகோர்ட்டில் வாதத்தில் அவருக்கு நிகர் ஒருவரும் இலர்; ஸர் வி. பாஷ்யமையங்காரைத் தவிர, அவருக்குச் சமமான சட்ட நிபுணரும் இல்லை. அவர் வக்கீல் தொழில் புரிகையில் நேரில் பார்த்த இன்பம் நம்முள் பலருக்குக் கிடையாது; ஆனால் அவர் நீதிபதியாக இருந்து நியாயம் வழங்கியதைக் கண்டவர் பலர் இன்றும் நம்மிடையே இருக்கின்றனர்.

மிகவும் விரிந்துள்ள சட்ட சாஸ்திரத்தில் இருக்கும் சில புலப்படாத விஷயங்களை விளக்கி, அவர் தீர்ப்புகள் அளித்திருப்பதை நாம் அனைவரும் அறிவோம். அவர் எழுதிவைத்தவை எளிய நடையில் இருப்பதுடன் விஷயத்தை மிகத் தெளிவு படுத்துகின்றன; பல சிக்கலான வழக்குகளை அவர் அற்புதமாகத் தீர்த்து வைத்தார். சட்ட விஷயத்தில் அவர் சிறிதளவும் தவற மாட்டார்; அது நியாயத்திற்கேற்ப இருப்பதையே அவர் நாடி வந்தார். குடிபாத்தியதை சம்பந்தமாக அவருக்கிருந்த ஆர்வம் அளவிட முடியாதது. ஜமீன்களில், ஜமீன்தார்களுக்கும் குடிகளுக்கும் உள்ள தொடர்பு எத்தகையது என்று அறிய இது உதவியது இங்கிலீஷ் சட்டத்தினால் இந்தப் பாத்தியதைக்கு ஏற்படும் தீமையை அவரே நிவர்த்தி பண்ணினார் குடிகளுக்கு நிலத்தில் இருக்கும் உரிமை ஜமீன்தார்

மூலம் கிடைத்ததல்ல என்பதையும் அவர் நிலை நிறுத்தினார். நிலத்தில் ஜமீன்தார்களும் குடிகளும் சம உரிமையாளர்கள் என்றும், குடிவார பாத்தியதை குடிகளுக்கும், மேல்வார பாத்தியதை ஜமீன்தார்களுக்கும் உண்டு என்றும் இப்போது அனைவரும் ஒப்புக்கொண்டிருப்பதற்கு அவரே காரண புருஷர்.

சுயமாகவும் தைரியமாகவும் சிந்திப்பதற்கு அவருக்கிருந்த சக்திக்கு மற்றோர் உதாரணத்தையும் எடுத்துக்காட்டலாம். இங்கிலாந்திலுள்ள சட்டப் பிரகாரம், பொதுவாக தர்மத்திற்கு என்று சொத்தை எழுதி வைத்தால் அது செல்லுபடியாகாது. நம் நாட்டில் தர்மத்திற்காக ஏற்பட்ட சாஸனங்களுக்கும் அந்தச் சட்டத்தை உபயோகிக்கச் சிலர் முயன்றபோது மணி ஐயர் அந்தச் சட்டத்தை இங்குப் பிரயோகம் செய்வதைப் பலமாக ஆக்ஷேபித்தார். சீப் ஜஸ்டிஸ், ப்ரிவி கௌன்ஸில் நீதிபதிகள் ஆகியவர்களிடமிருந்து மாறுபட்ட அபிப்பிராயத்தைத் தமது தீர்ப்பில் அவர் ஸ்தாபனமாக்கினார். நம் ஸ்மிருதிகளில், "தர்மம்" என்ற பதத்திற்கு ஒரு குறிப்பிட்ட அர்த்தம் உண்டென்று எடுத்துக்காட்டி, "இஷ்டம்" என்றும் "பூர்த்தம்" என்றும் பாகுபாடுள்ள பல நற்காரியங்களை அது குறிக்கும் என்றார் அவர். நமது பழைய நீதி சாஸ்திரங்களில் காணப்படுபவை தமது மனச்சாக்ஷிக்கு ஒத்திருந்தால், அதை வெளியிட அவர் தயங்கியதே இல்லை. சமூகத்தை முக்கியமாகப் பாதிக்கும் பல விஷயங்களிலும் மக்களின் மனநிலைக்கு ஏற்றபடி அவர் வாழ்ந்தார்.

அவர் பல வருஷங்கள் வாழ்ந்து நற்பெருமையுடன் காலமானார். அவர் பெரிதாக மதித்த கௌரவம் அதிகாரிகள் அளித்தவை அன்று. பொது ஜனங்களின் அன்பையும் ஆதரவையும் பெறுவதே கௌரவம் என்பது அவர் கருத்து. பல பொது விஷயங்களுக்கு

அவர் உதவி புரிந்தார்; அவற்றுள் ஒன்று மிக முக்கிய மானது; நம் மதஸ்தாபனங்களின் நிலை சீர்கெட்டு வருவதைத் தடுக்க அரிய சேவைசெய்த தர்ம ஸம்ரக்ஷண சங்கத்தை அவர்தாம் ஸ்தாபித்தார்.

டாக்டர் சுப்பிரமணிய ஐயரை நேரில் அறிந்தும், அவரைப்பற்றிக் கேள்விப்பட்டும், சட்ட சாஸ்திரத் துறையில் ஈடுபட்டிருக்கும் நாமும், மற்ற அனைவரும் அவரை உன்னதமான உதாரணமாகக்கொண்டு, அவர் காட்டிய வழியைப் பின்பற்றவேண்டும். ஒவ்வொரு வருக்கும் இருக்கவேண்டிய ஒரு பிரதான லக்ஷியத்தை எடுத்துரைக்கும் இச்சிறு புத்தகத்தைப் படிப்பவர் எல்லோரும், அவர்கள் எத்துறையில் ஈடுபட்டிருந் தாலும் சரி, நற்பயனடைவார்கள் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

மயிலாப்பூர் }
30-10-42 }  கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்.

# சிறப்புரை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பாரத நாட்டில் தோன்றிய ஞானமணிகள் சில. அம்மணிகளுள் ஒன்று டாக்டர் சுப்பிரமணியம் என்னும் தமிழ் மணி. டாக்டர் சுப்பிரமணிய ஐயர் பல கலைகளிலும், பல துறைகளிலும் மணியாயிலங்கினமையால், அவரை, 'மணி ஐயர்' என்று உலகம் அழைத்தது.

டாக்டர் மணி ஐயரின் வாழ்க்கையை ஒரு காவியம் என்னலாம். அவர் வாழ்க்கையில் பல நிகழ்ந்தன. அவைகளுள் குறிக்கத்தக்கன மூன்று. ஒன்று இராம கிருஷ்ண சங்கத்தைப் பற்றியது; இன்னொன்று தியோசாபிகல் சங்கத்தை ஒட்டியது; மற்றொன்று நாட்டைக் குறித்தது.

இராம கிருஷ்ண சங்கம் புரிந்துவரும் நலத்தை அறியாதாரில்லை. இராம கிருஷ்ணரின் ஞான மணத்தை உலகெங்கும் கமழச்செய்தவர் விவேகானந்தர். விவேகானந்தர் மேல் நாடு போந்து சொன்மாரி பெய்த பின்னரே அவர்தம் மாண்பு உலகில் பரவலாயிற்று. விவேகானந்தரை மேல்நாட்டுக்கு அனுப்ப முயன்றவர் யாவர்? டாக்டர் மணி ஐயர்.

தியோசாபிகல் சங்கம் உலகில் பொது அறத்தைப் பெருக்கி வருகிறது. அச்சங்கத்தைக் கண்டவர் மாது பிளவட்ஸ்கி அம்மையார்! அதை வளர்த்தவர் டாக்டர்

அன்னிபெஸண்ட் அம்மையார். இவ்வம்மையாரின் தனி முயற்சியால் தியோசாபிகல் சங்கம் வளரவில்லை. ஒரு வான் மணியின் ஒளி டாக்டர் பெஸண்ட் அம்மையார் வழியே அச்சங்கத்தை வளர்த்தது. அவ் வான்மணி டாக்டர் மணி ஐயர்.

நமது நாட்டுக்கு விடுதலை வேட்கையை எழுப்பினவருள் டாக்டர் சுப்பிரமணிய ஐயரும் ஒருவர். டாக்டர் அன்னிபெஸண்ட் அம்மையார் காவலில் வைக்கப்பட்ட காலத்தில் டாக்டர் மணி ஐயர் சிங்கமெனக் கர்ச்சித்துச் செய்த கிளர்ச்சி அமெரிக்கா வரை எட்டியது. பலர் வாழ்வு முழுவதும் நிகழ்த்திய கிளர்ச்சிகள் ஈராண்டு டாக்டர் சுப்பிரமணிய ஐயர் நிகழ்த்திய கிளர்ச்சிக்கு ஈடாகா. தேசபக்த மணிகளுள்ளும் ஒளிகான்றவர் டாக்டர் மணியர்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த ஒரு பெருந் தமிழ் மணியின் வாழ்க்கை வரலாறு பல நன்மணிகளைத் தோற்றுவிக்குமென்று நம்புகிறேன். இந்நூலாக்கியோர்க்கு எனது வாழ்த்து உரியதாக.

மயிலை அல்லயன்ஸ் கம்பெனியாரின் வெளியீட்டுத் திறத்தை ஈண்டு விரித்துக் கூறவேண்டுவதில்லை. அதை நாடறிடும். அல்லயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப் பெற்ற நூல்கள் யாவும் தமிழ் நாட்டுக்குப் பல வழியிலும் பயன் விளைத்து வருதல் கண்கூடு. இப்பொழுது அக் கம்பெனியார் பெரு மக்களின் வரலாறுகளை வெளியிடுவது மகிழ்ச்சியூட்டுகிறது. நாட்டு நலங்கருதி ஒழுங்கு முறையில் உழைக்கும் அவர்க்கு நாடு கடமைப் படுவதாக.

திரு. வி. கலியாணசுந்தரன்.

## பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கண்ணியமான குடும்பம் | ... | 1 |
| 2. | பொதுவாழ்வில் பிரவேசம் | ... | 7 |
| 3. | மதிப்பும் மரியாதையும் | ... | 18 |
| 4. | தொழிலில் திறமை | ... | 29 |
| 5. | சீர்திருத்தத்தில் சிரத்தை | ... | 36 |
| 6. | நேர்மையான நீதிபதி | ... | 46 |
| 7. | கல்வியிலே கருத்து | ... | 53 |
| 8. | தேசத்திற்குத் தொண்டு | ... | 61 |
| 9. | உயர்வும் உபதேசமும் | ... | 75 |

அனுபந்தம்

| | | |
|---|---|---|
| வாழ்க்கை அட்டவணை | ... | 89 |

## மஹான்

# மணி ஐயர்

## 1

### கண்ணியமான குடும்பம்

நம் பாரத நாட்டில் பல மஹான்கள் பிறந்திருக்கின்றனர். அவர்களுள் மணி ஐயர் ஒருவர். இப்பெரியார் தென்னாட்டுத் திலகமாகத் திகழ்ந்தவர். மக்களின் மதிப்பை முற்றும் கவர்ந்த மாசிலா மணி. நம் தேச சரித்திரத்தில் இவருக்கு முக்கியமான ஸ்தானம் உண்டு. இவரது முழுப்பெயர் டாக்டர் ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயர்; ஆனால் எல்லோரும் இவரை அன்புப் பெயராக மணி ஐயர் என்றே அழைத்தனர். முழுப்பெயரைச் சொன்னால் முக்கால்வாசிப்பேர் அறியார். இந்த நூற்

கடைசியாக 1840-ஆம் வருஷத்தில் தம் புத்திரியான துரைராஜ நாச்சியாரின் 'கார்டியன்' ஸ்தானத்தை அவர் தமது முயற்சி காரணமாக ராணி பர்வதவர்த்தனி நாச்சியாருக்கு வாங்கிக்கொடுத்தார்.

இதற்கப்புறம் 1846 முதல் 1862 வரை ராணி பர்வதவர்த்தனி நாச்சியாரே ராமநாதபுரம் ராணியாக இருந்து பூரண அதிகாரத்தை வகித்தார். இந்த வழக்குச் சம்பந்தமாகத் தம்மிடம் ராணி கொடுத்த பணம் முழுவதுக்கும் சரியான கணக்குக் கொடுத்து மிகுதியைத் திருப்பித் தந்தபோது, ராணி பர்வதவர்த்தனி நாச்சியாருக்குச் சுப்பையரது கண்ணியமான நடத்தை பெருமகிழ்ச்சியையே பயந்தது. பணம் வாங்க அவர் மறுத்தும் ராணி வற்புறுத்தினாள். இந்தப் பணத்தைக்கொண்டு சுப்பையர், 1842-ஆம் வருஷத்தில் சில தர்ம கைங்கர்யங்களைச் செய்தார். ஒரு யஜுர் வேத பாடசாலையை ஸ்தாபித்தார்; சைத்ரோத்ஸவத்தில் திருக்கல்யாண தினத்தன்று மண்டபப்படி நடத்தும் பொருட்டு நிதியை நிறுவினார்; ஒவ்வொரு துவாதசியிலும் அர்ச்சனைகள் பண்ணவும் ஏழைப் பிராமணர்களுக்கு அன்னம் அளிக்கவும் வசதி செய்தார். (இந்தக் கைங்கரியம் இன்றும் இந்த வம்சத்தைச் சேர்ந்த ஸ்ரீ எம். எஸ். ராமஸ்வாமி ஐயரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.) சைத்ரோத்ஸவத்தில் பகவான் எழுந்தருளுவதற்காகக் கோவிலுக்குள் கட்டப்பட்ட மண்டபத்தின் முன்புறத்தில், சுப்பையர் தம் இரு மனைவியருடன் பிரார்த்தனை செய்யும் தோற்றத்தில் ஓர் உருவம் இன்றும் இருக்கிறது. இந்த மண்டபத்தைக் கட்டிவைத்தவர் சுப்பையரே.

சுப்பையர் தமது முதல் மனைவியின் மரணத்திற்கப்புறம் மறுமுறை மணந்துகொண்டார். முதல்

மனைவிக்கு ராமஸ்வாமி ஐயர், சங்கர ஐயர் என்று இரு குமாரர்கள் பிறந்தனர்; இவ்விருவரும் பிற்காலத்தில் நல்ல பதவி வகித்தனர். இரண்டாம் மனைவியின் புத்திரரே நம் மணி ஐயர். சுப்பையர் அதிக தைரியசாலி. எதற்கும் அஞ்சாதவர். பொதுஜன சேவையிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தவர். இது காரணமாக அவர் பல சமயங்களில் உள்ளத்தில் தோன்றியதை வெளிப் படையாகத் தெரியப்படுத்தப் பயப்பட்டதே இல்லை. அதிகாரிகளுக்கு அவரிடம் அடிக்கடி அதிருப்தி தட்டியது; அவரை அடக்கிவைக்க முயன்றனர். 1842-ஆம் வருஷம் நவம்பர் மாதம் 21-ஆம் தேதி அவர் சென்னை ரெவினியூ போர்டாருக்கு அனுப்பிய விண்ணப்பத்திலிருந்து அவர் பட்ட கஷ்டம் புலனாகும்; பெரிய கலெக்டர் மிஸ்டர் ப்ளாக்பர்ன் அவரிடம் கோபம் கொண்டிருந்ததும் தெரிய வரும்.

> "மதுரையிலிருக்கும் சுப்பையன் மிகவும் வணக்கத்துடன் சலாஞ்செய்து எழுதிக்கொண்ட விண்ணப்பம் யென்னவென்றால், என்னை மதுரை ஜில்லா பிரின்சுபால் கலெக்டர் துரையவர்கள் யாதொரு காரணமன்னியில் பாராவிலும் செவுகாமொகுலிலும் வைத்துத் தொந்திரவு செய்கிற சங்கதிகளைக் குறித்து நான் அக்டோபர் மாதம் 20-வது தேதியில் அனுப்பியிருக்குற விண்ணப்பத்துநாலே, விசிதமா யிருக்குமே. அதற்கு யாதொரு உத்திரவும் இது வரையிலும் இடைக்கவில்லை."

இந்த மகஜரில் சுப்பையர் மதுரையில் இருந்துவரும் நிலைமை மிகவும் விசனகரமா யிருப்பதாகக் குறிப்பிட்டு, அதைப்பற்றி விசாரணை நடத்த ஒரு கமிஷன் உடனே

வழங்கினர் அதிகாரிகள். இந்த வருஷமும் இவரது திறமை பிரகாசித்தது. சிரத்தையுடன் படித்துப் பெருமையுடன் தேறியதற்காக இவருக்கு வருஷாந்திரக் கொண்டாட்டத்தில் எல்பின்ஸ்டனின் "இந்து சரித்திரம்" என்ற புத்தகம் கொடுக்கப்பட்டது. இப்புத்தகத்தின் மூலந்தான் இவர் காயத்திரி மஹா மந்திரத்தின் சூக்ஷுமத்தை அறிந்துகொண்டார். 1859-இல் தேர்ச்சி பெற்ற நால்வர்களுள் இவரும் ஒருவர். இந்தப் பள்ளிக்கூடத்தில் வகுப்புகள் இதற்குமேல் இராததால் இவர் அதை விட்டுவிட நேர்ந்தது.

இவருடைய தாயும் சகோதரர்களும் மேல் படிப்புக்காக இவரைச் சென்னைக்கு அனுப்ப விரும்பவில்லை. கலெக்டர் ஆபீஸில் உத்தியோகம் பார்த்துவந்த பெரிய சகோதரர், டிபுடி கலெக்டர் ஆபீஸில் இவருக்கு மாதம் இருபது ரூபா சம்பளத்தில் ஒரு குமாஸ்தா பதவியை வாங்கிக் கொடுத்தார். ஒரு நாள் இவருடைய சகோதரர் கலெக்டருடன் பேசிக்கொண்டிருக்கும்போது, பரீக்ஷை முடிவு வெளிவந்தது. தேறியவர்கள் ஜாபிதாவில் மணி ஐயருடைய பெயரும் காணப்படவே, இவர் விஷயத்தில் கலெக்டருக்குச் சிரத்தை உதயமாகியது. வேலை உடனே கிடைப்பதற்கும் தாமதம் இல்லை. ஆகஸ்ட் மாதம் இவர் டிபுடி கலெக்டர் ராமராவின் குமாஸ்தாவானுர். ராமராவுக்கு ஆங்கிலத்தில் அதிக ஞானம் இராததால், ராமநாதபுரத்திற்கும் அவர் இவரைத் தம்முடன் அழைத்துச் சென்று இவரிடம் மிக்க அன்பாக இருந்தார். தம் பந்துக்களை விட்டுப் பிரிந்திருக்க இவர் விரும்பவில்லையாதலால், மறுபடியும் மதுரைக்கே திரும்பிக் கலெக்டர் ஆபீஸில் குமாஸ்தா பதவியேற்ருர். இந்தக் காலத்தில் இவர் சட்டம் படித்து, "ப்ளீடர்" பரீக்ஷையிலும்

தேறினார். இவரது விருப்பத்திரத்தைப் பரிசீலித்தவர் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் மிஸ்டர் இன்னிஸ்.

பரீக்ஷையில் தேறியதுதான் மிச்சம்; தொழில் நடத்த இவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. மதுரை ஜில்லா ஜட்ஜாக இருந்த மிஸ்டர் ஆர். ஆர். காட்டன் விநோதமான குணம் கொண்டவர்; மனம் போனபடி யெல்லாம் காரியம் செய்வார். இத்தகையவரிடந்தான் மணி ஐயர் 'ஸன்னது' பெறவேண்டியிருந்தது. அந்நாளில் வக்கீல்களின் தொகை மிகக் குறைவாக இருந்த போதிலும், புதியவர் ஒருவர் வருவதைப் பழைய வக்கீல்கள் விரும்பவில்லை. இவர்களுள் ஒருவரான ராம சாமி நாயக்கர் அடிக்கடி நீதிபதியைச் சந்தித்துத் தமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொண்டு வந்தார்.

கோர்ட்டில் மிஸ்டர் காட்டன் முன்பு, மணி ஐயர் தம்மை வக்கீலாகச் சேர்த்துக்கொள்ள மனுச் செய்து கொண்டார். அவ்வளவுதான்! வந்துவிட்டது கோபம் நீதிபதிக்கு. மணி ஐயரை வெளியே பிடித்துத் தள்ளும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. மனு நிராகரிக்கப்பட்டது. இதற்கான காரணம் அதிவிநோதமானது. மணி ஐயர் தம் முன்பு ஆஜரானபோது தம்மை ஸலாம் செய்யாதது பெரிய குற்றம் என்று கருதினார் நீதிபதி. பாவம்! மணி ஐயர் வருத்தத்துடன் கலெக்டர் ஆபீஸுக்கே திரும்பினார்.

1862-இல் 'கிரிமினல் புரோஸீஜர் கோட்' அமுலுக்கு வந்தபோது, ஜில்லா கலெக்டர் இவரது சட்ட ஞானத்தைக் கண்டு இவரையே பப்ளிக் ப்ராஸிக்யூட்ட ராக நியமித்தார். அப்போதும் மிஸ்டர் காட்டன்தான் ஜில்லா நீதிபதியாக இருந்தார். மணி ஐயர் அவர் முன்பு முதல்முதலாக வழக்காடப் போனார். அன்றே, "குரங்கு மாதிரி இங்கே ஏன் கத்துகிறீர்?" என்றார் அவர். ஆனால்

சந்தர்ப்பங்கள் இருந்தன. வழக்குகளைத் தயாரிக்கவும், வாதாடவும் அவர்களுக்கு வசதிகள் அதிகம். ஆரம்பத்தில் சொற்ப வருவாய்தான் கிடைத்ததாயினும், மணி ஐயர் மனந்தளராமல் தொழிலிலேயே நாட்டம் உடையவ ரானார். இதனால் காலக்கிரமத்தில் தொழில் பெருகிற்று. இவரது குணவிசேஷமும் கவர்ச்சியான நடத்தையும் கக்ஷிக்காரர்களை இவரிடம் ஆகர்ஷித்தன.

இவர் முதல் முதல் நடத்திய பெரிய வழக்கு, ராமநாதபுரம் ஜமீன்தாரி சம்பந்தமானது. ராமநாதபுரம் ஜமீன்தார் மீது ஒரு வழக்கு; அவருக்குச் சென்னை ஸர்க்கார் 12 லக்ஷ ரூபாய் கடன் கொடுத்திருந்ததால் இந்த வழக்கில் அவர்களுக்கும் சிரத்தை ஏற்பட்டது. அட்வகேட் ஜனரலான மிஸ்டர் ஜே. டி. மெயின் ஜமீன்தார் சார்பில் பேசினார். மணி ஐயர் அவருக்குத் துணையாக இருந்து உதவினார். மணி ஐயர் மிகுந்த சிரத்தையுடன் இந்த வழக்கு விவரங்களைத் தயாரித்து வந்ததைக் கண்டு மிஸ்டர் மெயின் மிகவும் சந்தோஷப் பட்டார். "இந்த வழக்கை நடத்தும் பொறுப்பை மணி ஐயரிடமே விட்டுவிடலாம். அதனால் பயம் இல்லை" என்று அவர் ஸர்க்காருக்கும் எழுதினார்.

பொது வாழ்விலும் மணி ஐயர் பிரபலரானார். மதுரையில் இவரே முதல்வராகச் சோபித்தார். 1870-ஆம் வருஷம் இவர் மதுரை நகரசபை அங்கத்தின ராக நியமிக்கப்பட்டார். இதற்குப்பின் பத்து ஆண்டுகள் வரையில் இவருக்கு இந்தத் தொடர்பு நீடித்திருந்தது. 1880-இல் நடந்த ஒரு சிறு சம்பவந்தான் இவர் நகர சபையை விட்டு விலகியதற்குக் காரணமாயிற்று. நகரசபை தங்கள்மீது அதிக வரியைச் சுமத்தியதை ஆக்ஷேபிக்க, நகரத்திலுள்ள கடைக்காரர்கள் கடையை

மூடிவிட்டனர். நகரசபையின் உபதலைவரான அவ்வூர் டிபுடி கலெக்டர் இந்த வேலை நிறுத்தத்திற்கு மணி ஐயரே காரணபூதர் என்று காரணமின்றிச் சந்தேகித்தார். இதை அவர் கலெக்டர் மிஸ்டர் ஜே. எச். ஸ்டோக்ஸுக்கும் அறிவித்தார். உடனே மணி ஐயர் தமது நகரசபை ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்தார்.

1882-இல் மிஸ்டர் க்ரோல் ஜில்லா கலெக்டராக வந்தபோது அவர் இவரைத் திருப்பி அழைத்தார். இதற்கிணங்கி இவர் இரண்டரை வருஷங்களுக்கு அதிகமாகவே நகர அபிவிருத்தியில் அக்கறை கொண்டிருந்தார். நகரசபைத் தலைவர் எனவும் மக்கள் இவரைக் கருதினர். மதுரைமாநகர் அழகுடன் விளங்க இவர் வழிதேடினார். சுமார் 18,000 ரூபாய்ச் செலவில் ஒரு பூந்தோட்டத்தை அமைத்தார். இதில் இவரது குடும்பத்தார் உதவியது 4000 ரூபாய். கோவிலைச் சுற்றி நந்தவனத்தை இவர் ஏற்படுத்தினார்; நகரத்துக்கு வேண்டிய ஜல வசதிக்கு இவர் திட்டமிட்டார்.

இவருக்கு இவ்விதம் பொதுஜனசேவையில் ஆர்வம் அதிகரித்தது. ஜான் ப்ரூஸ் நார்ட்டன்போன்ற பெரிய மனசு படைத்த மேனாட்டினர் நம் நாட்டார் உள்ளத்தில் சேவை உணர்ச்சியை ஊட்டிவந்த காலம் அது. மணி ஐயரும் இதனால் பயன் அடைந்தவர். இது இவர் எழுதிய ஒரு கடிதத்தின்மூலம் விசதமாகும்.

"1850-க்குப் பிறகு மிஸ்டர் ஜே. பி. நார்ட்டனை ஆசிரியராகக் கொண்டு 'இந்தியன் ஸ்டேட்ஸ்மன்' (மதராஸ் அத்தினியம்?) என்ற பத்திரிகை வெளிவந்துகொண்டிருந்தது. அந்தப் பத்திரிகையை அடிக்கடி இரவல் வாங்கி, நான் அதில் காணும் வியாசங்களைப் படித்து இன்புறுவேன். அவர் இங்கி

லாந்துக்குப் போய் அங்கேயே தங்கிவிட்ட பின்பு, 'ஜே. பி. என்.' என்ற கையெழுத்துடன், தாம் தஞ்சை ராணிகளுக்காக ஆஜரான வழக்கு முதலியன சம்பந்தமாகப் பல ரஸமான கடிதங்களை எழுதி வந்தார். அவர் பச்சையப்பன் தர்மஸ்தாபன விழாக்களில் செய்த பிரசங்கங்களைப் பத்திரிகைகளில் படித்தபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இருந்ததில்லை."

1873-இல், மதுரை தேவஸ்தான கமிட்டியார் 40,000 ரூபாய்க்குக் கணக்குக் காட்டவில்லை : உடனே இவர் கமிட்டியார்மீது வழக்கு நடத்தினர். ஜட்ஜாக இருந்த மிஸ்டர் மிஸ்டர் பி. பி. ஹட்சின்ஸ் முன்பு வழக்கு நடந்தது. இந்த பணத்தைச் சொந்தமாக்கிக்கொண்ட கமிட்டி அங்கத்தினர் ஒருவரே முழுத்தொகையையும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. இந்த நன் முயற்சியைப் பாராட்டி மதுரை மக்கள் இவரைத் தேவஸ்தானக் கமிட்டிக்குத் தங்கள் பிரதிநிதியாக தேர்ந்தெடுத்தனர். 1875-இல் ஏழாம் எட்வர்ட் சக்ரவர்த்தி, வேல்ஸ் இளவரசர் என்ற ஹோதாவில் மதுரைக்கு விஜயம் செய்தார் : அப்போது அவருக்கு மணி ஐயரே உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தார். ராஜகுமாரர் விஜயத்திற்காக வசூலாகியிருந்த நிதியில் 14,0000 ரூபா மீதம் இருந்தது. வைகை நதிக்குப் பாலம் கட்ட அதை இவர் உபயோகித்தார். இதற்கு ஒன்பது வருஷங்களுக்குப்பின் சென்னை கவர்னர் ஸர் க்ராண்ட் டப் மதுரைக்கு விஜயம் செய்தார். நகர சபையின் உப தலைவரான மணி ஐயர், அவரை வரவேற்று உபசரித்தார். ஸர். க்ராண்ட் டப் உடனே இவரிடம் மதிப்புக் கொண்டார். இதற்கிடையில் 1877-இல் லார்ட் லிட்டன்

நடத்திய டில்லி தர்பாரில் இவருக்கு நற்சாக்ஷிப்பத்திரம் வழங்கப்பட்டது.

1882-இல் வைஸ்ராய் லார்ட் ரிப்பன் ஸ்தல சுய ஆட்சி முறையை விஸ்தரிப்பதில் சிரத்தை காட்டினார்; இந்தியர்களின் அன்பரான அந்தப் பிரபு இந்தியர்களிடமே இயன்றவளவு நிர்வாகத்தை ஒப்பிக்கவேண்டுமென்று விரும்பினார். ஆகவே அவர் சுயயாட்சிமுறை அபிவிருத்தி சம்பந்தமாக அவ்வருஷம் மேமாதம் 18-ஆம் தேதி ஒரு தீர்மானத்தை வெளியிட்டு, மாகாண ஸர்க்கார்களுக்கு அதை அனுப்பினார். அந்தத் தீர்மானத்தில் கண்டுள்ள கொள்கைகளை எவ்விதம் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது என்பதை ஆலோசித்து தெரிவிக்கும்படி சென்னை ஸர்க்கார் ஒரு கமிட்டியை நிறுவியது. இந்தக் கமிட்டித் தலைவர் மிஸ்டர் எச். இ. ஸல்லிவன்; அங்கத்தினர்கள்: கர்னல் ஸாங்கி, மிஸ்டர் கிரிக், மிஸ்டர் (பிறகு ஸர்) எச். இ. ஸ்டோக்ஸ், ஸ்ரீ (பிறகு ஸர்) ஏ. சேஷையா சாஸ்திரி, ஸ்ரீ பி. செஞ்சல் ராவ், மிஸ்டர் ஆர். எஸ். பென்ஸன், ஸ்ரீ ஏ. எல். வேங்கடரமண பந்துலு, மிஸ்டர் (பிறகு ஸர்) எச். டபிள்யு. ப்ளிஸ்; மணி ஐயரும் பின்னர் இந்தக் கமிட்டி அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். பெரும்பாலான அங்கத்தினர்களது அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ள இவர் மறுத்துவிட்டார். தமது சொந்த அபிப்பிராயத்தை இவர் தனியாகவே வெளியிட்டார். இதில் இவரது நிர்ப்பயமான இயல்பும், மனவுறுதியும் தெளிவாகின்றன. இதைப் படித்தால் அதிகாரிகளது வீண் ஜம்பமும், தங்கள் காரியங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ள வேண்டும் என்று மக்களிடை வளர்ந்து வந்த அவாவும், பொது வாழ்வு எவ்வளவு

பரிசுத்தமாக இருக்கவேண்டும் என்பதும் நன்கு புலனாகும்.

"இந்தக் கமிட்டியின் சிபார்சுகள் சுயாட்சி முறை விஸ்தரிப்புக்கு நாட்டு மக்கள் தகுதிபெற வில்லை என்ற ஆதாரமற்ற எண்ணத்தையும், கலெக்டர் - மாஜிஸ்திரேட் நகரசபைத் தலைமைப் பதவியிலிருந்து விலகிவிட்டால் கெடுதி அதிகரிக்கும் என்ற அநாவசியமான கருத்தையுந்தான் பிரதானமாகக் கொண்டிருக்கின்றன.

"இந்தக் கமிட்டியின் சிபார்சுகளின் பிரகாரம், ஸ்தல ஸ்தாபனங்களுக்கிருக்கும் உண்மையான அதிகாரமாகிய பணத்தைச் செலவழிப்பதற்கான உரிமை ரத்தாகிறது. ஒவ்வோர் இனத்திற்காகவும் இன்ன இன்ன தொகைதான் செலவாக வேண்டும் என்பது சட்ட பூர்வமாக நிர்ணயிக்கப் படவேண்டும் என்றும், இந்த விதிகளை ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களே அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் கமிட்டி விரும்புகிறது. இந்திய ஸர்க்கார் வெளியிட்ட தீர்மானத்தின் நோக்கம், அந்த அந்த ஊரில் சிரத்தை அதிகரிக்கச்செய்து, பொறுப்பு வளரும்படி செய்வதேயாகும். அபாயகரமான சட்ட வரம்பு மீறிய செய்கைகளிலிருந்து ஸ்தல ஸ்தாபனங்களைத் தடுத்து, இதர விஷயங்களில் அவைகளுக்குப் பூரண உரிமை கொடுப்பதே உத்தேசம். இவ்விதம் மக்களிடையே தன்னம்பிக்கையும் சுயாட்சிக்கான யோக்கியதையும் உதயமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது."

இதே யாதாஸ்தில் மணி ஐயர் தாலூகா போர்டுகளின் உப தலைவர்களாக ஸ்தல அதிகாரிகளை

நியமிப்பதையும் ஆக்ஷேபித்தார். இதனால் அதிகாரியின் மனப்போக்குப் பிரகாரந்தான் நிர்வாகம் நடக்கும் என்பதையும் இவர் சுட்டிக் காட்டினார். நகரசபைத் தலைவருக்கோ, உபதலைவருக்கோ ஊதியம் கொடுப்பதை யும் இவர் விரும்பவில்லை. இவ்வாறு செய்வதால் தீங்கான போட்டியும் பணப் பித்தும் மேலிட்டு, பதவியின் மேன்மை மறைந்துவிடும் என்றும் இவர் குறிப்பிட்டார். சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பே இத்தகைய உயர்தர நோக்கத்தைக் கொண்டிருந்தார் மணி ஐயர்.

இதற்கு இரண்டு வருஷங்களுக்கப்புறம் இவர் தம் மனைவியை இழந்தார். இரண்டு வருஷங்களாகவே நோய்வாய்ப்பட்டிருந்த இவருடைய பத்தினியார் 1884-இல் காலமானார். இந்தப் பிரிவு இவரது மனத்தைப் பாரமார்த்திக விசாரணையில் வலித்து இழுத்தது; ஆத்மிக விஷயங்களில் அக்கறை ஏற்பட்டது இவருக்கு. இந்தச் சமயத்தில்தான் இவருக்கும் பிரம்மஞான சபைக்கும் உறவு உண்டாயிற்று. அந்தச் சபையின் ஸ்தாபகரான கர்னல் ஆல்காட்டுக்கும் இவருக்கும் பரிசயம் ஏற்படவே, இவர் அதில் சேர்ந்துகொண்டார்; இதற்கப்புறம் அநேக வருஷ காலம் அதில் பெரிய ஸ்தானமும் வகித்தார். அந்தச் சபையில் சேர்ந்தது முதற்கொண்டே நமது ஹிந்து மதத்தில் மேலும் மேலும் அதிகமான பற்றுதல் தமக்கு ஏற்பட்டதாக இவரே பின்னர் அடிக்கடி கூறியதுண்டு.

## 3

## மதிப்பும் மரியாதையும்

1885-ஆம் வருஷத்தில் மணி ஐயர் சென்னைக்கு வந்து சேர்ந்தார். தலைநகரிலேயே தொழில் நடத்தத் தீர்மானித்தார். இதற்குப் பல காரணங்கள் உண்டு. 1884-ஆம் ஆண்டில் கவர்னர் ஸர் க்ராண்ட் டப் இவரைச் சென்னைச் சட்டசபை அங்கத்தினராக நியமித்துக்கொண்டார். மஹாராஜா ஸர் கஜபதிராவ் பதினைந்து வருஷ காலம் இந்தச் சபையில் அலங்காரமாக இருந்தாரே தவிர, அவரால் மக்களுக்கு ஒருவித உபயோகமுமில்லை. இவரது நியமனத்திற்குச் சிறிது காலம் முன்பாகவே பல தேசியப் பத்திரிகைகள் சட்டசபைக்குப் பொதுஜன மதிப்புள்ளவரை நியமிக்கவேண்டும் என்று வற்புறுத்தி வந்தன. இவரது நியமனத்தை வரவேற்று "ஹிந்துப்"ப் பத்திரிகை பின்கண்டபடி எழுதியது.

"தமது தாய்நாட்டாரின் நோக்கத்தையும் அபிலாஷைகளையும், மற்றும் விவசாயிகளது நிலைமையையும், சட்ட சபையில் ஸ்ரீ கஜபதி ராவுக்குப் பதிலாக ஸ்தானத்தை ஏற்கும் கனம் எஸ். சுப்பிரமணிய ஐயரைக் காட்டிலும் நன்கு அறிந்த இந்தியர் இப்போது நம்மிடையே இல்லை. பரம்பரைச் சலுகை, திறமை, குணவிசேஷம், பொது விஷய பக்தி ஆகியவை சம்பந்தமாகத் தென்னிந்தியாவில் இவரது பெயருக்கு நல்ல பிரசித்தி உண்டு எந்தச் சமயத்தி

லும் சுய நலத்தை முன்னிட்டுப் பொது நலனை இவர் விட்டுக்கொடுத்ததே இல்லை. எந்தப் பொது இயக்கமானாலும், இவரது ஒத்துழைப்பே முதலில் நாடப்பட்டது. இவர் உதவிபுரிய முன்வரவும் தயங்கியதில்லை...இவரது நியமனம் விசேஷமானது. சட்டசபை வெறும் பித்தலாட்டம் என்ற காலம் மலையேறி, அருகதை யில்லாதவர்களிடம் சட்டம் இயற்றும் வேலையை ஒப்பிக்கக் கூடாது என்று பொதுமக்கள் இதுவரை வற்புறுத்திவந்திருப்பதற்கு ஆதரவு கிடைத்திருக்கிறது என்பதையும் இது சூசிப்பிக்கிறது. கனம் சுப்பிரமணிய ஐயரைப் பொது மக்கள் தங்களுடைய சொந்தப் பிரதிநிதி என்றே மிக்க சந்தோஷத்துடன் வரவேற்பார்கள்."

அப்போது சட்ட சபையில் அதிகப் பேச்சுவார்த்தைக்கு இடமே இல்லை; அங்கத்தினர்கள் அதிகம் விவாதிப்பது இல்லை; கூட்டமும் அடிக்கடி கூடுவதில்லை; இரண்டு அல்லது மூன்றுமணி நேரத்திற்கெல்லாம் கூட்டமும் கலைந்துவிடும்.

சட்ட சபையில் மணி ஐயர் நான்கு வருஷகாலம் அங்கத்தினராக இருந்தார். பொதுஜனங்கள் தம்மிடங் கொண்ட நம்பிக்கைக்குப் பழுதில்லாமல் இவர் நடந்து கொண்டார். சபைக் கூட்டத்தில் தமது கருத்தை ஒளியாமல் எடுத்துரைத்தார்; வாய்பொத்திக்கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. சபையில் ஒரு மசோதாவைப் பிரேரித்த முதலாவது உத்தியோகப்பற்றில்லாத அங்கத்தினர் இவர்தாம். மலையாளத்தில், குடிகள் தாங்கள் உழுது பயிரிட்ட நிலத்தில் செய்யும் அபிவிருத்திகளுக்காக அவர்களுக்கு ஈடு கொடுக்கவேண்டும் என்று இவர் வற்புறுத்தினர். இதற்கான மசோதாவை 1886-ஆம்

ஒன்றை நடத்தத் தீர்மானித்தனர், இது புனாவில் கூட ஏற்பாடாகியிருந்தது ; ஆனால் அசந்தர்ப்பம் காரணமாக பம்பாயில்தான் இந்த மகாநாடு நடைபெற்றது. இது தான் முதலாவது காங்கிரஸ் மகா சபை. இதற்கு எழுபத் திரண்டு பிரதிநிதிகள் வந்திருந்தனர். ஸ்ரீ டபிள்யு. ஸி. போனர்ஜி தலைமைவகித்தார். ஸ்ரீ திலாங் சட்டசபைச் சீர்திருத்தத்தைப்பற்றிய தீர்மானத்தைப் பிரேரித்தார். அதை மணி ஐயர் ஆமோதித்தார். அப்போது தமது அனுபவத்தை இவர் விவரித்தார். அங்கத்தினர்களுக்கு அதிகாரம் இல்லையென்பதைப் பகிரங்கமாக்கினார்.

"சட்ட சபை அங்கத்தினரான பின்புதான், அநேக விஷயங்களில் நம் நண்பர்கள் அநாவசியமாக வெளியாரால் தாக்கப்பட்டுவருகின்றனர் என்பதும், நல்லதோ கெட்டதோ செய்வதற்கு அவர்களுக்கு அங்கே கொஞ்சங்கூடச் சலுகையிடையாதென்பதும் எனக்குத் தெரியவந்தன. அவர்கள் தகாத இடத்தில் இருக்கின்றனர் என்பதை நான் மனப்பூர்த்தியாகக் கூறவேண்டும். இந்தச் சபைகளின் அமைப்பு மாற்றி வைக்கப்படாதவரையில், உத்தியோகப்பற்று இல் லாத அங்கத்தினர்கள் மூலம் தேசத்திற்கு நன்மை ஏற்படும் என எதிர்பார்ப்பது வீண்பிரமை. இந்தச் சபைகளில் நிறைவேறும் சட்டங்களைக் கவனிப்ப வருக்கு. அதிகாரவர்க்கத்தின் உத்தரவுகளை ஆமோ தித்து அவற்றிற்கு சட்ட அங்கீகாரம் அளிப்பது தான் இந்தச் சபைகளின் கடமையாக இருந்துவரு கிறது என்பது தெரியவரும். ஸர்க்காருடைய கொள் கைக்கு விரோதமாக இராதவரையில் என்னுடைய சிபார்சுகளும் அங்கீகரிக்கப்பட்டன."

இந்தப் பிரசங்கத்தில் தம் மனத்தில் பட்டதை இவர்

வெளிப்படையாகக் கூறிவிட்டார். இத்தகைய முயற்சி காரணமாகத்தான் அரசியல் சீர்திருத்தம் நமக்குக் கிடைக்கலாயிற்று; 1892-இல் சட்டசபைகள் பெரிதாக்கப் பட்டு, அவற்றிற்கு விசேஷ அதிகாரங்கள் வழங்கப்பட்ட தற்கும் இந்த மூலபுருஷர்களது சேவையே முக்கியமாகும்.

கல்கத்தாவில் அடுத்த வருஷம் ஸ்ரீ தாதாபாய் நௌரோஸ் தலைமையில் இரண்டாவது காங்கிரஸ் மகா சபை கூடியது. நாட்டில் ஏழைமை அதிகரித்து வருகிற தென்றும், ஸர்க்கார் இதைப் பரிகரிக்கும் வழியைத் தேடிவந்தபோதிலும், மக்களின் கஷ்டம் மறைவதற்குப் பிரதிநிதித்துவ ஸ்தாபனங்கள்தான் உதவும் என்றும் ஒரு தீர்மானத்தை ஸ்ரீ (பிறகு ஸர்) டின்ஷா வாச்சா பிரேரேபித்தார். இதை மணி ஐயர் ஆமோதித்தார். அப்போது இவர் ஜனத்தொகையில் பெரும்பாலோர் விவசாயிகளே என்றும். தங்கள் குறைகளைத் தங்கள் பிரதிநிதிகள் மூலம் அதிகாரிகளிடம் தெரிவிக்க அவர்களுக்குச் சாத்தியமில்லை என்றும் அவர்களுடைய உரிமைகளுக்குத் தக்க பாதுகாப்புக் கிடைத்தால்தான் அவர்களது ஏழைமை நிலை ஒழியும் என்றும் பேசினர்.

" ரயத்துவாரி முறை நிர்வகிக்கப்படுவதை நேரில் பார்த்தவர்கள் ஜமீன்தாரி முறையே நலம் என்று கருதுவதாகத் தோன்றுகிறது. சில இடங்களில் ஜமீன்தார்கள் தங்களது குடிகளிடமிருந்து தம்பிடிகூட விடாமல் வசூல் செய்யக்கூடும்: இதைக் குடிபாத்தியதைச் சட்டம் மூலம் தடுத்துவிட இயலும். ஆனால் சென்னை மாகாணத்தில் ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் செய்யும் அதிக்கிரம வசூலை எந்தக் குடிபாத்தியதைச் சட்ட மூலமாகவும் தடுக்க முயல்வது சாத்தியமன்று. ஸர்க்காருக்கு விரோதமாக,

சட்ட பூர்வமாகத் தீர்வை உயர்வை நிர்ணயிக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளும் ஒரு ஸர்க்கார் உத்தியோகஸ்தரையாவது காண எனக்கு அதிக ஆவலாயிருக்கிறது.....எங்கள் மாகாணம் மிகவும் வறியது. இதைப் போக்குவது எப்படி? பிரதிநிதித்துவ முறையாலேயே இது சாத்தியம். நாம் 'இந்த மாதிரி பிரதிநிதித்துவம், அந்த மாதிரி பிரதிநிதித்துவம்' என்றெல்லாம் கோரவில்லை. இங்கிலாந்தில் வளர்ச்சி பெற்றிருக்கும் பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களையும் நாம் எதிர்பார்க்கவில்லை. நாம் அபேக்ஷிப்பது, பிரதிநிதித்துவக் கொள்கை நமக்கும் உண்டு என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும், என்பதே. நமக்குப் பூரணமான தகுதி இருக்கிறது என்பதை இந்தச் சபையே புலப்படுத்தும்."

கல்கத்தா காங்கிரஸில் "பப்ளிக் சர்விஸ்" (ஸர்க்கார் உத்தியோகங்கள்) சம்பந்தமாக ஒரு யாதாஸ்தைத் தயாரித்து அதை அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இதில் மணி ஐயரும் இடம் பெற்றார். 1887-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் ராயல் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் சென்னைக்கு விஜயம் செய்தது. அப்போது மணி ஐயர் அதன்முன் சாக்ஷியம் கூறினார். பொது உத்தியோகங்களுக்கு ஆட்களைப் பொறுக்கியெடுக்கும் பிரச்னை பற்றி இவர் கூறியவை எல்லோராலும் ஒப்புக்கொளப்பட்டன. இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஏககாலத்தில் போட்டிப் பரீக்ஷை நடக்க வேண்டும்; இந்த ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷைக்கு இரு நாட்டாரும் ஆஜராகலாம்: ஆஜராகுபவர்களின் வயசு 23-க்கு மேல் இருக்கக்கூடாது; ஐரோப்பிய பாஷைகளுக்கு சமமான ஸ்தானம் ஸம்ஸ்கிருதத்திற்கும் அரா

பிக்கும் அளிக்கப்படவேண்டும் : குதிரையேற்றம், தேகப் பயிற்சி ஆகியவற்றில் பயிற்சியுள்ளவர்களுக்குச் சலுகை காட்டவேண்டும் - இவைகளே மணி ஐயர் தெரிவித்தவை.

சில முக்கிய மதத்தினருக்காக ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கலாமா என்று கமிஷன் அங்கத்தினர் ஒருவர் இவரை வினவினார். "பொது உத்தியோகங்களுக்குப் பொறுக்கும் விஷயத்தில் பல மதத்தினருக்கும் முக்கியத்துவம் கொடுப்பதைப்போல் ஆக்ஷேபகரமானது எதுவும் இருக்க முடியாது" என்றார் இவர். இதற்கப்புறம் இந்தியர் மேனேட்டுக்குப் போய்வருவதால் பலன் உண்டென்பதையும் இவர் குறிப்பிட்டார். இவரது சாக்ஷியத்தைக் கேட்டவர் அதை நன்கு மதித்தனர். இவ்வருஷ இறுதியில் சென்னையில் காங்கிரஸ் மகாசபை கூடியது ; அப்போது பிரதானபுருஷராக விளங்கியவர் மணி ஐயர்தாம். தவிரவும் சென்னைக்கு வந்த தினம் முதற்கொண்டே இவர் "ஹிந்து" பத்திரிகைக்குத் தம்மால் இயன்ற உதவியைப் புரிந்துவரலானார் ; அதற்காக "நேஷனல் பிரஸ்"ஸை வாங்கிக்கொடுத்து அதன் அபிவிருத்தியை நாடினார்.

பம்பாயில் காங்கிரஸ் மகாசபை இரண்டாம் தடவையாக 1889-இல் கூடியது. அப்போது மணி ஐயர் சாசுவத பைசல் முறை எல்லா இடங்களுக்கும் கொண்டு வரப் படவேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார். அப்போது நிலச்சுவான்தார் என்ற முறையில் தாம் படும் அவஸ்தையை இவர் விவரித்தார். அபிவிருத்திக்கு வரி போடுவதில்லை என்று அதிகாரிகள் கூறுவதாகவும், ஆனால் வியவசாயிகளோ அதற்கும் தாங்கள் வரி கொடுத்துக் கஷ்டப்படுவதாகக் கூறுவதாகவும் இவர் தெரிவித்தார். நிலத்தில் ஒரு வியவசாயி

செய்யும் அபிவிருத்திகளுக்கு வரி விதித்தால் விவசாயம் நசித்துவிடும் என்றார் இவர்.

"தஞ்சாவூர் நிலத்தீர்வை விகிதம் திருத்தப்படும் என்று தெரிந்தவுடன், நில அபிவிருத்திக்காக ஒரு ரூபா கூட இனிமேல் செலவழிக்கக் கூடாது என்று நான் என் ஏஜண்டுக்கு உத்தரவு போட்டேன். இதற்கப்புறம் நிரந்தரத் தீர்வைக்குட்படாத ஒரு ஏகராநிலங்கூட நான் வாங்கவில்லை. இந்தப் பிரச்னையைக் கவனிக்க இந்த ஒரு விஷயமே உங்களுக்குப் போதும். இதிலிருந்து நிரந்தரத் தீர்வை எவ்வளவு அவசியம் என்பது உங்களுக்குத் தெளிவாகும்."

நீதிஸ்தலத்திற்குப் போய் தம் கக்ஷியை வழக்காடும் உரிமை விவசாயிகளுக்கு இருக்கவேண்டியதன் அவசியத்தையும் இவர் அச்சமயம் எடுத்துச் சொன்னார்.

மணி ஐயரின் சேவையைச் சிலாகித்து, சர்க்கார் இவருக்கு 1887-இல் மகாராணியாரின் பொன்விழாக் கொண்டாட்ட சமயத்தில் "ராய் பாதூர்" என்னும் பட்டத்தை அளித்தனர்.

1891-இல் மணி ஐயர் காங்கிரஸ் மகாசபையின் தலைமை ஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே சமயம் இவர் சென்னை ஹைக்கோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டதே அந்தப் பதவியை இவர் ஸ்வீகரிப்பதற்குத் தடையாக இருந்தது. அவ்வருஷம் நாகபுரியில் நடைபெற்ற காங்கிரஸ் மஹாசபையில் அக்கிராஸனம் வகித்த ராய்பஹதூர் பி. அநந்தாச்சார்லு இதைப்பற்றி தமது தலைமைப் பிரசங்கத்தில் பின்கண்டபடி பிரஸ்தாபித்தார் :—

"என் நண்பர் திவான் பஹதூர் சுப்பிரமணிய ஐயர் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜாக நியமிக்கப் பட்டிருப்பதும், இன்று நான் இப்பதவியை வகிப்ப தற்கு மற்றொரு காரணம், முதலெடுப்பில் இது வருத்தத்தை விளைவிக்கக் கூடும்; ஆனால் என் போன்றவர்களுக்கு இதனால் மகிழ்ச்சியே நிலவு கிறது. காங்கிரஸைப்பற்றிய மட்டிலுங்கூட இது திருப்திகரமானது என்றே நாம் கருத வேண்டும். நல்ல திறமையுள்ள ஒருவர் பொதுஜன ஊழியம் புரிவதால், தாம் பெரிய பதவி வகிக்க வேண்டும் என்ற அவரது அபிலாஷைக்குப் பாதகம் நேரிடுவ தில்லை என்பதையும் இது புலப்படுத்துகிறதல்லவா? ஸர்க்கார் உத்தியோகத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் பொது இயக்கங்களில் சம்பந் தம் கொள்ளாமல் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் எப் போதும் இருந்ததில்லை. இது மிகவும் அபூர்வம்! முதலில் ஸர்க்கார் தமக்குக் கொடுத்த பதவியைக் கண்டு மயங்கி விடாமல் திரும்பவும் பொது வாழ் வுக்கே அவர் திரும்பியவர் முன்போலவே ஊக்கத் துடனும் சிரத்தையுடனும் உழைப்பவர். திரும்பவும் அவருக்கு நாட்டில் பெரும் பதவி அளிக்கப்பட்டிருக் கிறது. இவ்விதம் இருதலைப்பட்ட ஊழியத்தைப் புரியும்போதும், அவர் மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொண்டிருக்கிறார். ஒருவகை ஊழியம் கார ணமாக மற்றொன்றுக்குக் குறை நேராதபடி அவர் நடந்துகொண்டவர். இந்தப் பெரிய தேசிய சபையில் அவருக்குப் பதிலாகத் தலைமைப் பதவியை ஏற்று நான் பரிபூரணமாக என்னுடைய கடமையைச் செய்துமுடிப்பது சாத்தியம் அன்று; ஆயினும்,

தேசத்தொண்டில் சிறந்தவரான அவர் தற்சமயம் நாட்டில் நம்மவரால் அடையத்தக்கதான மிகக் கௌரவம் வாய்ந்த பதவிக்கு உயர்த்தப்பட்டிருப்பதற்குக் காங்கிரஸ் அதிகமான சந்தோஷத்தை அடைவதே உசிதமாகும்."

## 4

## தொழிலில் திறமை

சட்டசபை அங்கத்தினராக நியமிக்கப்பட்டபோது சென்னையில் வந்து குடியேற இவர் விரும்பவில்லை. ஆனால் வெகு சீக்கிரத்தில் இவரது மனம் மாறிவிட்டது. மதுரையை விட்டு வந்ததும் ஒரு வருஷகாலம் இவருக்கு நல்ல வருவாய் கிடைக்கவில்லை; மீண்டும் மதுரைக்கே திரும்பிவிடலாமா என்றுகூட இவர் பன்முறை சிந்தித்துப் பார்த்தது உண்டு. அப்போது நகரில் ராஜா டி. ராமாராவ், ஸ்ரீ (பிறகு ஸர்) வி. பாஷ்யம் ஐயங்கார் முதலிய நிபுணர்கள் தொழில் நடத்திவந்தனர். காலக்கிரமத்தில் இவருக்குப் புகழும் பாராட்டும் அதிகரித்தன. 1888-இல் இவர் கவர்ன்மெண்ட் ப்ளீடராக நியமிக்கப்பட்டார். இதற்குமுன் இந்தப் பதவி வேறு எந்த இந்தியரும் பெற்ற தில்லை. இதற்கப்புறம் நீதிபதி யாகும்வரை இவர் அடிக்கடி இந்தப் பதவியை வகித்துவந்தார். கவர்ன் மெண்ட் ப்ளீடர் என்ற முறையில் இவர் பல பெரிய வழக்குகளில் வாதிக்கப் புகுந்து அவற்றைத் திறம்பட நடத்தினார்.

திருப்பதி மஹந்து வழக்கு மிகவும் முக்கியமானது. இந்த வழக்கு ஆரம்பமான சமயம் கவர்ன்மெண்ட் ப்ளீட பதவியிலிருந்து இவர் விலக நேர்ந்தது; ஆகவே இவரை இவ்வழக்கை நடத்துவதற்கென்றே ஸர்க்கார்

'விசேஷ ப்ராஸிக்யூடராக' நியமித்தனர். திருப்பதிக் கோவிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட த்வஜஸ்தம்பத்தின் அஸ்திவாரத்தில் சுமார் இரண்டு லக்ஷ ரூபா மதிப்புள்ள பொன் நாணயத்தைக் கொட்டியிருப்பதாக மஹந்து கூறினர். ஆனால் அதற்குப் பதிலாகச் செப்பு நாணயந்தான் போடப்பட்டதென்று அவர்மீது குற்றஞ் சாட்டப்பட்டது. சாஸ்திரோக்தமான விதிகளின் பிரகாரம் நிறுவப்பெற்ற த்வஜஸ்தம்பத்தை இனி எவரும் அசைக்கமுடியாது என்ற தைரியம் மஹந்துவுக்கு இருந்தது; தாம் செய்த காரியம் வெளியாருக்குத் தெரிய முடியாது என்ற நம்பிக்கையும் அவருக்கு உண்டு. மணி ஐயர் மட்டும் மஹந்து குற்றவாளி என்று திடமாகத் தீர்மானித்துவிட்டார். இதை விசாரித்த நீதிபதிகள் சீப் ஜஸ்டிஸ் ஸர் ஆர்தர் காலின்ஸும் ஸர் முத்துசாமி ஐயரும் ஆவர். மஹந்துவுக்காக நார்ட்டர் வாதிக்க வந்தார். ஹிந்துக்களின் புனித க்ஷேத்திரமான திருப்பதியில் மத விரோதமாக ஒன்றும் செய்யக்கூடாது என்றும் மத விஷயங்களில் ஸர்க்கார் நடுநிலைமை வகிக்கப்போவதாக இதுவரை கூறிவந்திருப்பதை மீறலாகா தென்றும் நார்ட்டன் வாதாடினர். த்வஜஸ்தம்பத்தைத் தொடுவது கூடத் தீங்கானது என்றார் அவர். இதற்கெல்லாம் மணி ஐயர் சிறிதாவது பின்வாங்கவில்லை. அரை மணி நேரந்தான் இவர் பின்னர்ப் பேசினர். வெகு சொற்ப காலத்திற்குள்ளேயே நார்ட்டனின் வாதத்தை சிதறவடித்து விட்டார். "வானம் இடிந்துவிழுந்தாலும் நீதி வழுவக்கூடாது என்பதே சட்டத்தின் கோட்பாடு; இப்போது ஓர் அற்ப விஷயமான த்வஜஸ்தம்பம் கீழே விழுந்துவிடுமே என்ற காரணத்தைக் கொண்டு நியாயத்தை வழங்காமல் இருக்கக்கூடாது" என்று இவர் கூறிமுடித்தார்.

அவ்வளவுதான்! கோர்ட்டில் ஒரே பரபரப்புக் காணப்பட்டது. இவரது வாதத்ின் வேகத்தைக் கண்டு வந்திருந்தவர் வியந்தனர். த்வஜஸ்தம்பத்தைப் பெயர்க் கலாமென்று நீதிஸ்தலத்தில் உத்தரவாகியது. மஹந்து செய்திருந்த வஞ்சகச் செயல் வெளியாகியது. மணி ஐயரின் தைரியத்தை எல்லோரும் போற்றிப் புகழ்ந்தனர்.

1894-இல் தஞ்சையில் ஒரு பெரிய வழக்கு நடை பெற்றது. "நாகேசுவர ஐயர் கள்ளக் கையெழுத்து வழக்கு" என்று அது வழங்கப்பட்டது. ஜில்லா ஜட்ஜ் மிஸ்டர் ட்ரம்னேர் அதை விசாரித்தார். சுமார் 61 தினங்கள் அந்த விசாரணை நடைபெற்றது. ஸர்க்கார் சார்பில் மணி ஐயரும், பிரதிவாதிகள் சார்பில் நார்ட்டனும் வழக்கை நடத்தினர். கடைசியில் நாகேசுவர ஐயரின் குற்றம் நிரூபிக்கப்பட்டுத் தண்டனை விதிக்கப் பட்டது. அந்த வழக்கின் மூலம் இவரது புகழ் மேலும் பரவியது. வழக்கின் முடிவில நீதிபதி இவர் காட்டிய சிரத்தையையும் இவர் மேற்கொண்ட சிரமத்தையும் பாராட்டினர்.

தாம் நடத்தும் வழக்குகளுக்கு ஆதாரங்களைக் கண்டெடுத்துக் கொடுத்துத் தமக்கு உதவிபுரியும் இளைய வக்கீல்களுக்கு மணி ஐயர் அதிக உபகாரம் புரிந்தார். தம் ஜூனியர்களுக்கும், தமக்குக் கிடைக்கும் தொகையில் ஒரு பங்கைக் கொடுக்கும வழக்கத்தை ஆரம்பித்தவர் மணி ஐயர்தாம். இவ்விதம் இவர்மூலம் பயனடைந்தவர் அநேகர். ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர். ஸ்ரீ பி. ஆர் சுந்தரையர் முதலியவர்களுக்கு மணி ஐயர் செய்த உதவி அதிகம். இவரது ஆதரவினுல்தான் அவர்கள் விரைவில் முன்னுக்கு வந்தனர்.

1890-இல் மணி ஐயர் ஒரு புது வழக்கத்தை

ஆரம்பித்து வைத்தார். இது சில வருஷ காலம் நீடித்திருந்து பிறகு நின்றுவிட்டதாயினும், இப்போது குறிப்பிடற்குரியதாகும். ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை காலை 11 மணிக்கு மணி ஐயர் வீட்டில் பல வக்கீல்கள் கூடிப் பேசுவது வழக்கம். மணி ஐயர், ஸர் பாஷ்யமையங்கார், ஸ்ரீ டி. சுப்பராவ், ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், ஸ்ரீ பி. ஆர். சுந்தர ஐயர், ஸர். வி. ஸி. தேசிகாச்சாரியார், ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் முதலியோர் கூடுவார்கள். இந்திய லா ரிப்போர்ட்களில் வெளியாகி இருக்கும் தீர்ப்புகளை அப்போது இவர்கள் ஆராய்வார்கள். இளைய வக்கீல்கள் இந்தத் தீர்ப்புகளை முன்னதாகவே படித்துவிட்டு, எவற்றிலாவது குறை இருப்பதாகக் கருதினால் அவற்றை அன்று விவாதிக்க வேண்டும். இவ்வாறு பெரிய வக்கீல்கள் இளையவர்களுடன் மனங்கலந்து பேசி வந்ததால், எல்லோருக்கும் நன்மை ஏற்படலாயிற்று. சட்டஞானம் அபிவிருத்தியடையவும் இது உதவியது. சென்னை வக்கீல்கள் சங்கத்தின் ஸ்தாபனத்திற்கு மணி ஐயரும் காரணபூதராயிருந்தார். 1891 முதல் 1895 வரை இவர் அதன் தலைவராகவும் இருந்தார்.

சென்னைக்கு வரும்போதே இவரது பிரசித்தி இங்கும் பரவியிருந்தது. மணி ஐயர் வந்த பின்னரே ராஜா ராமாராவின் கீர்த்தி மங்கியது. இதற்கப்புறம் இவரும் பாஷ்யமையங்காருமே முன் நின்றனர். இருவருக்குமிடையே போட்டி பலமாக இருந்தது. இருவரும் அடிக்கடி பல வழக்குகளில் ஒருவருக்கொருவர் எதிராக ஆஜராயினர். சில சமயங்களில் அதிகப் பணம் செலவழிக்கக்கூடிய பெரிய நகரத்தார்களும் ஜமீன்தார்களும் இருவரையும் தங்கள் சார்பிலேயே அமர்த்திக்கொண்டு

வந்தனர். ஒருவரை விட்டுவிட்டால் அவர் எதிரியின் பக்கம் போய்விடக்கூடும் என்ற பயம் அவர்களுக்கு.

"ஸர் சுப்பிரமணிய ஐயருக்கு நல்ல ஞாபக சக்தி உண்டு. தீர்ப்புகளைப்பற்றியும், அவை வெளி வந்த பக்கம் முதலியவற்றைப்பற்றியும் அவர் பிசகின்றி எடுத்துச் சொல்வார். நியாய வாதத்தில் தனிச் சிறப்புப் பொருந்தியவர் இவர். சூக்ஷ்மங்களை எளிதில் அறியும் சக்தி வாய்ந்தவர். ஸர் பாஷ்யம் ஐயங்கார் வழக்கைப்பற்றிய தஸ்தாவேஜுகளை மிகவும் நிதானமாகப் படிப்பார்; கூர்மையாகக் கவனித்துப் படிப்பார். ஒரு வரிகூட விடாமல் படிப்பார். ஸர் பாஷ்யம் ஐயங்கார் அதிக காலத்தை எடுத்துக்கொள்வது வீணாவதில்லை. ஸர் சுப்பிர மணிய ஐயர் விஷயம் வேறு. 500 பக்கமானாலும் சரி, 1000 பக்கமானாலும் சரி வெகு சீக்கிரத்தில் படித்து முடிப்பார். வேகமாகப் படித்தாலும் விஷயத்தை மறக்கமாட்டார். விரைவாகப் படித்தா லும் கருத்தைக் கிரஹித்தறிவதில் நிபுணர். தமது கக்ஷியைச் சரிவர எடுத்துக்காட்டி நீதிபதிகள்முன்பு மிகத் திறமையுடன் இவர் வாதாடுவார்.

இருவரையும் நேரில் பார்ப்பது எங்களுக்கு இன்பகரமாயிருந்தது. ஸர் பாஷ்யம் ஐயங்கார் கோர்ட்டில் மிகவும் சாவதானமாய்ப் பேசுவார். தீர யோசித்தே பேசுவார்: பிறருக்கு வருத்தத்தை விளைவிக்கக்கூடிய வார்த்தையை உச்சரிக்க மாட் டார். அவரது பேச்சைக் கேட்கும்போது சுற்றி இருப்பவர்களுக்குப் பொறுமை போய் ஆத்திரமும் வருவதுண்டு. ஆனால் ஸர் சுப்பிரமணிய ஐயர் வெகு அவசரமாய்ப் பேசுவார். அவருடைய வார்த்தைகள்

பிரவாகம்போல் விழுந்தோடும். உணர்ச்சி ததும்பப் பேசிய இவருக்கு நாவன்மை இயற்கையாகவே வாய்த்திருந்தது. கம்பீரமாகப் பேசுவது இவரது ஸ்வபாவம். மனித இயல்புகளை நன்கறிந்தமை இவருக்கு அதிகம் உதவியது. வெளியூரில் நீண்ட காலம் தொழில் புரிந்ததும், அசல் வழக்குகளில் ஆஜராகிப் பலதிறப்பட்டவர்களுடன் பழக நேர்ந்ததும், பரிவும் பரோபகார புத்தியும் அமைந்திருந்ததுமே இதற்குக் காரணங்கள். ஒருவனுடைய நடத்தையைச் சரிவர மதிப்பிட வேண்டுமானால் நாம் அவரது ஸ்தானத்தில் இருப்பதாகப் பாவித்துக் கொள்ளவேண்டும். சாக்ஷியங்களைப் பற்றிய விஷயங்களை விவாதிப்பதில் இவருக்கு நிகரே இல்லை. வழக்கின் தத்துவத்தை எடுத்துரைப்பதிலும் இவரே சிறந்து விளங்கினார். வெறும் சட்ட சம்பந்தமான பிரச்னைகளில் மட்டுமே ஸர் பாஷ்யம் ஐயங்கார் அதிகமாகச் சோபித்தார் என்று கூறலாம். அதில் கூட ஸர் பாஷ்யத்தைத் தவிர வேறு யாரும் ஸர் சுப்பிரமணியத்திற்கு மேற்பட்டவர் எனக் கூற முடியாது.

நியாயவாதி என்ற முறையில் இவர் எதிரியிடமும் நீதிபதியிடமும் மிகக் கண்ணியமாக நடந்து கொண்டார். வாக்ஜாலத்தை அதிகப்படுத்தக் கூடாது என்பதே இவரது கருத்து. எதிரியை உபத்திரவித்து, அவரது கக்ஷிக்கு இடமில்லாமல் செய்வதை இவர் விரும்பியதில்லை. பிரதி தினமும் இவரது லக்ஷியமும் நடத்தையும் மேலும் மேலும் பிரகாசித்தன. உயர்தரமான கொள்கைகளைக் கடைப்பிடித்து, நம்மிடம் அன்றடம் காணப்படும்

குறைகளை நிவர்த்திப்பதிலேயே இவர் கருத்தூன்றி யிருந்தார்.

எல்லோரிடத்திலும் மிகவும் இனிமையாகவே இவர் நடந்துகொள்வார். பிறரது கூற்றைக் கேட்ட பின்பே ஒரு முடிவுக்கு வரும் குணவிசேஷம் இவ ரிடம் இருந்தது; தமது அபிப்பிராயத்தை அவசிய மானால் மாற்றிக்கொள்ளவும் சித்தமாயிருந்தார். பிறரைப்பற்றிக் கடுமையாகவோ தூஷணையாகவோ, ஒரு வார்த்தைகூட இவரிடமிருந்து வராது."

— (மதராஸ் லா ஜர்னல், 1925, ஏப்ரல்)

மணி ஐயரை நன்கறிந்த ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் மேற்கூறிய வாக்கியங்களை ஒரு சமயம் வெளி யிட்டார். பெரியார் பெருமையுடன் தொழில் நடத்திய விதத்தை நாம் இதன்மூலம் அறியலாம்.

மணி ஐயருக்கு 1890-ஆம் வருஷ ஆரம்பத்தில் "ஸி. ஐ. இ." பட்டமும், மறுவருஷம் "திவான்பகதூர்" பட்டமும் வழங்கப்பட்டன.

## 5

## சீர்திருத்தத்தில் சிரத்தை

பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு மணி ஐயர் பின்கண்ட பதிலைத் தந்தார். "மனோ தைரியம் பலதிறப்பட்டது. ஹிந்து விவாகச் சீர்திருத்த சங்கத்தில் சேருபவர் காட்டும் மனோதிடம் ஒருவிதம். ஒரு ஹிந்து விதவையை மணப்பவர் நிரூபிக்கும் மனோதிடம் அதைவிட மேலானது. இந்திய யுவர்கள் இங்கிலாந்துக்கு அனுப்பப்படவேண்டும் என்று நான் நினைப்பதாக உங்கள் முன்னிலையில் வந்து கூறுவதும் மனோதிடத்தினால் என்று நினைக்கிறேன்." சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு சீர்திருத்தத்தை வேண்டுவோர் துணிச்சல் நிறைந்தவர்களாகவே கருதப்பட்டனர் என்பதை இந்த வாக்கியங்களிலிருந்து நாம் ஊகிக்கலாம். மணி ஐயருக்கு இந்த விஷயத்தில் சிரத்தையும் அது காரணமாகத் துணிச்சலும் இருந்தன. 1890-இல் சென்னையில் சமூகச் சீர்திருத்த சங்கம் ஸ்தாபிக்கப் பட்டது. இதில் மணி ஐயரும் பிரதான புருஷரா யிருந்தார். இதே வருஷம் ராஜப்பிரதிநிதியின் சட்ட சபையில் சம்மத வயது நிர்ணய மசோதா கொண்டு வரப்பட்டது. இந்த மசோதாப் பிரகாரம் 12 வயசுக் குட்பட்ட பெண்ணுடன் கணவன் சேர்ந்திருக்கக்கூடாது என்று விதிக்கப்பட்டது. அப்படிச் செய்தால் புருஷனைத்

தண்டிக்க வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது. இந்த மசோதாவைச் சீர்திருத்த விரோதிகள் எதிர்த்தனர். இதற்கு அவசியமே இல்லை என்று அவர்கள் வாதாடினர். கடைசியாக, இந்த மசோதாவை மாகாணங்களுக்கெல்லாம் அனுப்பி, பிரமுகர்களது அபிப்பிராயத்தைக் கேட்பது என்று முடிவு செய்யப் பட்டது. மணி ஐயரின் அபிப்பிராயத்தையும் அதிகாரி கள் விரும்பினர். அப்போது இவர் தாம் இந்த மசோதாவை ஆதரிப்பதாயும், ஆனால் தமது மாகா ணத்தில் இதற்கு அவசியம் இருப்பதாகத் தமக்குத் தோன்றவில்லை எனவும் தெரிவித்தார்.

> "தங்களுடைய பெண்களின் ஹிதத்தை நாடும் பெற்றோர்களுக்கு இந்த மசோதா தைரியம் அளிக் கிறது. தன் மனைவி புஷ்பவதி யாகிவிட்டாள் என்பதை அறிந்ததும் அவளைத் தன் வீட்டிற்கு அனுப்பிவிடும்படி உபத்திரவிக்கும் மாப்பிள்ளை களின் அதிகாரப் போக்கையும் ஹிந்துக் குடும்பங் களின் நிலைமையையும் அறிந்தவர்கள், இது பெரிய அனுகூலம் என்பதை உணருவார்கள். தங்க ளுடைய பெண்களின் வயசு 12 நிறைவதற்கு முன்பு ருதுசாந்தி நடத்துவதைத் தடுக்க இது உதவு கிறது. தண்டனையை அனுபவிப்பதைவிடச் சட்டப் படி நடப்பதே மேல் என்று பெற்றோர் கருதுவார்கள்.
>
> இந்த மசோதாவின் நோக்கம் உத்தம மானது. இதற்கு அதிக அவசியம் இருக்கிறது."
>
> —(7-2-1891)

இதற்கப்புறம் சட்டப்படி, கடுமையான தண்டனை வழங்குவதையும் இவர் ஆக்ஷேபித்திருந்தார். இந்த மசோதா நிறைவேறிய பின்பு, இதற்காகப் பல புதிய

சீர்திருத்த சங்கங்கள் ஆரம்பமாகி, பலருக்கு அநாவசிய உபத்திரவமே விளையும் என்றும், அநேகர் வீணில் தண்டிக்கப்படுவர் என்றும் இவர் குறிப்பிட்டிருந்தார். இதைத் தடுப்பதற்கு வழி காட்டவேண்டும் என்றும் இவர் விரும்பினார்.

ஸர் வி. பாஷ்யம் ஐயங்கார் 1891-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் சென்னைச் சட்ட சபையில் "ஹிந்து வித்யாதன மசோதா"வைப் பிரேரேபித்தார். இந்த மசோதா, ஓர் அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்தவர் தமது வித்தை மூலம் சம்பாதித்த சொத்தைத் தமக்குச் சொந்தமாகக் கொள்ள அனுமதிக்கப்படவேண்டும் என்று விரும்பியது.

இதற்கு முன்பு இந்தப் பிரச்னையைப்பற்றித் திட்டமாக எதுவும் கூறமுடியாத நிலை இருந்தது. ஆகவே ஸர் பாஷ்யம் ஐயங்கார் சட்டபூர்வமாக இதைத் தீர்மானிக்கவேண்டும் என்றார். இம்மசோதா சுமார் பத்து வருஷகாலம் இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தது. இதை எதிர்த்தவர் அநேகர். ஆனால் முன்னேற்றத்தில் கருத்தும், சந்தேகங்களைத் தீர்ப்பதில் சிரத்தையும் கொண்ட அறிவாளிகள் இந்த மசோதாவை முழுமனத்துடன் வரவேற்றனர். மணி ஐயரும் இதைப் பரிபூரணமாக ஆதரித்தார். இதன் உட்கருத்து மிகவும் நியாயமானது எனவும் இவர் எடுத்துச் சொன்னார்.

"இந்த மசோதா சட்டமானால், இந்தப் பிரச்னையைப் பற்றிய சட்டம் தெளிவாகும்; சந்தேகங்கள் மறையும். இதனால் சொத்தைச் சம்பாதித்தவரது மரணத்திற்கப்புறம் மோசடி வழக்குகள் கிளம்புவதற்கு இடம் இராது.

இந்தச் சட்டத்தால் குடும்பங்கள் பிரிந்து

போகும் என்று கூறுகின்றனர். இதற்கு எதிராகவே தான் நிலைமை இருக்கும் என்பது என் கருத்து. அவிபக்த குடும்பத்தார் கூடியவரை இந்தத் தேசத்தில் பிரியாமல் இருக்கவே விரும்புகின்றனர். இந்தச் சட்டம் காரணமாக, சொத்தைச் சம்பாதித்தவரும் பிரிவினையை விரும்பாமல் கூட்டாகவே இருக்க விரும்புவார்.

குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் இளையவர்களது கல்விக்காக, இந்த மசோதா நிறைவேறிய பின்பு செலவழிக்கமாட்டார்கள் என்றும் சொல்லுகிறார்கள். ஒரு ஹிந்து தகப்பனாரோ அல்லது தமையனாரோ, தம் பிள்ளைக்கோ தம் தம்பிக்கோ கல்வி அளிக்கும்போது, எதிர்காலத்தில் அவர் சம்பாதிப்பதைப்பற்றிச் சிந்திப்பதில்லை. அவர்கள் கல்வி புகட்டுவதன் காரணம், இளையவர் தம் வாழ்க்கையை நடத்த வசதி பெறவேண்டும் என்பதே."

இவ்விதம் எழுதினார் மணி ஐயர். இம்மாதிரியான மசோதாக்களை நிறைவேற்றினால், மேலும் இத்தகையன பல தோன்றுவதற்கு வழி ஏற்படும் என இவர் குறிப்பிட்டார். அநேகம் குறைகள் இருப்பதாகவும், இவ் விஷயமாக ஸர்க்கார் முயற்சி எடுத்தலாற் பயன் இராதென்றும், சமூகமே சிரத்தை காட்டவேண்டும் என்றும் இவர் குறிப்பிட்டார். ஆயினும் இறுதியில் மசோதாவைக் கவர்னர் நிராகரித்துவிட்டார்.

ஹிந்துமத ஸ்தாபனங்களின் நிர்வாகத்திலும் மணி ஐயர் பல சீர்திருத்தங்களைச் சாதித்துவைக்க விரும்பினார். அநேக வருஷங்களாகவே தேவஸ்தான நிதிகள் துர் விநியோகமாக்கப்பட்டு வந்தன. எந்தக் காரணத்தை உத்தேசித்து மூலதனம் நிறுவப்பட்டனவோ அதற்குப்



[stamp]

பிரதிகூலமாகவே யாவும் நடந்துவந்தன. இதற்காகப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. ஸர்க்கார் மூலம் சட்ட மியற்றப் பல தடவைகள் மேற்கொண்ட பிரயத்தனங்கள் பயனற்றும் போயின. 1872-இல் ராமையங்கார் கமிட்டி தயாரித்த மசோதா நிராகரிக்கப்பட்டது. இதற்கு ஆறு ஆண்டுகளுக்கப்புறம் ஸர் வில்லியம் ராபின்ஸன் கமிட்டி சமர்ப்பித்த நகல் மசோதாவும் அதே கதியை அடைந்தது. 1883-இல் கார்மைக்கேல் கமிட்டியின் வேலையும் பயனற்றதாயிற்று. அடுத்த வருஷம் ஸல்லிவன் கமிட்டி இதே விஷயத்தில் முனைந்தும் வீணாகியது. பின்பு 1893-இல் முத்துஸ்வாமி ஐயர் கமிட்டி 103 பிரிவுகளைக் கொண்ட ஒரு நகல் மசோதாவை மிக்க பிரயாசையுடன் தயாரித்தது. மத விஷயங்களில் அரசாங்கத்தார் நடு நிலைமை வகிப்பதால் இந்த மசோதாவை ஒப்புக்கொள்ள முடியாதென்று அறிவிக்கப்பட்டது. இந்தக் கமிட்டியில் மணி ஐயரும் ஸ்தானம் வகித்தார். மற்றும் ஸர் வி. பாஷ்யம் ஐயங்காரும், ஸ்ரீ சங்கரன் நாயரும், ராய்பகதூர் பி. ரங்கநாத முதலியாரும் இதில் அங்கத்தினர்களாக இருந்தனர். இந்தக் கமிட்டியார் ஹிந்து தேவாலய நிதி நிர்வாகம் மிகவும் அதிருப்திகரமாக இருந்துவருவதாகவும், ஹிந்துக்களுக்குள்ள இக்குறையைத் தீர்க்கும் பொறுப்பு பிரிட்டிஷ் ஸர்க்காரையே சார்ந்ததென்றும், இதை அகற்ற முயலாவிடில் நல்ல நோக்கத்துடன் நிறுவப் பட்டவை ஒரு சிலரது சொந்தச் சொத்தாக மாறிவிடக் கூடும் என்றும் முறையிட்டனர். ஆகவே சட்டத்தைத் திருத்தி அமைத்துத் தரவேண்டும் என்றனர் கமிட்டியார். ஆயினும் பிரயோசனம் இல்லை!

1896-இல் மறுபடியும் ஒரு கமிட்டி கூடியது. இதில் மணி ஐயர், திவான்பகதூர் எஸ். ஸ்ரீநிவாஸ ராகவையங்

கார், ஸர் வீ. பாஷ்யம் ஐயங்கார், ஸ்ரீ பி. செஞ்சல் ராவ், திவான்பஹதூர் பி. ராஜரத்தின முதலியார், ஸ்ரீ ஸி. சங்கரன் நாயர் முதலியோர் அங்கத்தினரா யிருந்தனர். 1894-ஆம் வருஷம் மேமாதம் 26-ஆம் தேதி இந்திய ஸர்க்கார் வெளியிட்ட ஒரு தீர்மானத்தில், ஸர்க்காருக்கும் மதஸ்தாபனங்களுக்கும் இருக்கும் தொடர்பை விலக்குவது இயலாது என்றும், நடுநிலைமையில் நாட்டம் காட்டப்படும் என்றும், இந்தச் சீர்திருத்தவாதிகளின் முயற்சி காரணமாக ஸர்க்காருக்குத்தான் கெட்ட பெயரே தவிர நிர்வாகிகளுக்கு இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தனர். ஆகவே இந்தப் புதுக் கமிட்டியார் இந்திய ஸர்க்காரின் கருத்தை ஆக்ஷேபித்து அதற்குச் சமாதானம் கூறினர். உயர்தரக் கல்விபெற்று, மேனாட்டு முறைகளில் மனத்தைச் செலுத்திய ஹிந்துக்களே புதிய சீர்திருத்தங்களை விரும்புவதாக இந்திய ஸர்க்கார் கூறுவது ஆதாரம் அற்றது என்றனர் கமிட்டியார். நிர்வாகம் பரிபாலனம் நன்கு நிறைவேற வேண்டும் என்பதே எல்லோருடைய கருத்து என்றும் தெரிவித்தனர் கமிட்டியார். இந்தக் கமிட்டியாரின் யாதாஸ்தும் நகல் மசோதாவும் இந்திய ஸர்க்காருக்கு 1899-ஆம் வருஷம் ஸெப்டம்பர் மாதந்தான் அனுப்பப்பட்டன. இந்த முயற்சியும் பயன்தரவில்லை. இதற்கிடையில் சென்னைச் சட்டசபையில் 1896-இல் கல்யாணசுந்தரமையரும, ராஜப்பிரதிநிதி சபையில் 1897-இல் ராய்பகதூர் அனந்தாச்சார்லுவும மசோதாக்களைப் பிரேரித்துப் பார்த்தனர். 1903-இல் மறுபடியும் ஸ்ரீ ஜி. ஸ்ரீநிவாஸ ராவ் ஒரு மசோதாவைக் கொணர்ந்தார். ஆனால் சுமார் 20-வருஷங்களுக் கப்புறந்தான் மணி ஐயரின் நோக்கம் நிறைவேறியது.

எட்டாவது சீர்திருத்த மகாநாடு 1894-இல்

சென்னையில் கூடியது. இதற்கு மணி ஐயரே தலைவராக இருந்தார். இது விஷயமாக ஜஸ்டிஸ் ரானடே அவ்வருஷம் நவம்பர் மாதம் 3-ஆம் தேதி எழுதிய கடிதம் கவனித்தற் குரியது. "ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் தலைமைப் பதவியை ஒப்புக்கொண்டதில் எனக்கு மிகுந்த திருப்திதான். ஏனெனில், அவர் அதிக வயசாகியும் ஆகாமலும் உள்ள சீர்திருத்தக்காரர்களுக்குச் சம்மத மானவர்." இதிலிருந்து மணி ஐயருக்கு இருந்த மதிப்புத் தெளிவாகும்.

மணி ஐயர் தமது பிரசங்கத்தில் அநேக முக்கிய விஷயங்களைப்பற்றிப் பிரஸ்தாபித்தார். சீர்திருத்தத்தில் எல்லையற்ற ஆர்வம் கொண்டவர்களுக்கு இவர் உப தேசம் பண்ணினார். "அவசரம் காரணமாகக் காரியங் களைச் சரிவர ஆராயாமல் இருத்தல், மிகைப்படுத்தல், சகிப்பின்மை - இவற்றைத்தான் ஆத்திரக்காரர்களுடைய வியாசங்களிலும் பிரசங்கங்களிலும் நான் காண்கிறேன்" என்றார் இவர். இதனால் நோக்கம் பாதகமடைவதாகவும் இவர் வெளியிட்டார்; நேர்மையும் உத்ஸாகமும் நம்முள் பொங்கியெழுவதுபற்றிப் பிறரை விரோதிக்க லாகா தென்றும் இவர் தெரிவித்தார்.

"நீடித்த காலமாக நிலவிவரும் பழக்கங்களும், உணர்ச்சிகளும், ஸ்தாபனங்களும் ஒரே தினத்தில் மாறிவிடக் கூடியவை அல்ல. ஆர்வம் மிகுந்த சீர் திருத்தக்காரர்களுக்கு இது சற்றுக் கடுமையாகத் தோன்றக்கூடும். சதா காலமும் குற்றங் குறைகளை எடுத்துக் காட்டி, அவற்றை ஏளனம் செய்யாவிட் டால் அவை எப்படி நிவர்த்தியாகும் என்று அவர் கள் வினவலாம். அவர்களுக்கு நான் பின்கண்டபடி பதில் கூறுவேன். பொதுஜன அபிப்பிராயத்தைப்

பிரசார மூலம் உருவாக்குங்கள் என்பதே அது. அவ்வாறு பண்ணினால் புதிய பழக்கம் உதயமாகும். புதிய அனுஷ்டானத்திற்கு மதமும் சம்மதம் தரும். நமது புதிய திட்டத்திற்கு, மேற்பார்வையில் முரண் பட்டனவாகத் தோன்றும் மதாசாரங்களும் வழி பாடுகளும் பரிகசிக்கத்தக்கவை அல்ல என்பதே என் கருத்து. தற்போதைய ஸ்திதிக்கு எதிராகவுள்ள இந்த வழக்கங்களுக்கு மதத்தின் ஆதரவு எப்படிக் கிடைத்தது என்பதைப்பற்றிச் சீர்திருத்தக் காரர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இவ்வாறு பகுத்தறிவுடன் ஆராய்ந்தால், எதிர்ப்பில் பெரும் பகுதி மலையேறிவிடும்...மற்றுமொரு விஷயம். ஒரு விஷயத்திற்காக எதையும் தியாகம் பண்ணத் தயாரா என்று உங்களை நீங்களே கேட்டுப் பாருங்கள்."

மணி ஐயரின் உன்னதமான நோக்கம் இதன்மூலம் தெளிவாகிறதல்லவா? இவர் உரைத்த புத்திமதி மிகவும் சிறந்ததல்லவா? சீர்திருத்தக்காரர்களுக்கு மதம் இருப்ப தில்லை என்பதும் வீண் புரளி என்றார் இவர். இந்தப் பிரசங்கத்தில் பால்ய விவாகத்தை இவர் கண்டித்தார். தங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ள முடியாதவர், குழந்தைகளைப் பெற்றெடுப்பது விசனகரமானது என்று அச்சமயம் கூறினார். இதனால் புஷ்டியில்லாத சிசுக்களே அதிகம் உதிப்பதாக இவர் குறிப்பிட்டார்.

விதவா விவாகத்தைப்பற்றியும் இவர் பிரஸ்தா பித்தார். அந்தப் பிரச்னை மிகவும் சிக்கலானது என்று இவர் கருதினார். "நமது விவாகம், ஒப்பந்தத்தை அடிப் படையாகக் கொள்வது கூடாது" என்றார் இவர் புனிதமான புராதன வழக்கம் மறைந்து, நவநாகரிக

மயமான ஒப்பந்தமுறை தலை தூக்குவது விபரீதமாகும் என்றும் நிர்ப்பயமாகச் சொன்னார். "விவாகத்தின் புனிதமான பந்தம் மறைந்துவிட்டால், விவாக ரத்து வழக்குகளே அதிகரிக்கும். பல காரணங்களை முன்னிட்டு வழக்குகள் தொடரப்படும். ஆகவே தேச பக்தியும் சீரிய நோக்கமும் உள்ளவர்கள் விவாகத்தின் புனிதத் தன்மையைப் போக்காமலும், இணைந்த வாழ்வைக் குலைக்காமலும், பால்ய விவாகத்திற்குத் தடைசெய்ய வழிகாட்ட வேண்டும். ஆனால் இதற்குக் காலதாமதம் ஏற்படும்." இவ்விதம் கூறிவிட்டு, இவர் மேலும் பேசுகையில் மஹரிஷிகள் விதித்தவை ஆராயத்தக்கவை என்றும் சொன்னார்.

இதற்கு அடுத்தபடியாக, பெண் கல்வியைப்பற்றி இவர் பேசினார். பெண்கள் நல்ல தாய்மார்களாகவும் உத்தம சகோதரிகளாகவும் விளங்குவதற்குக் கல்வியே வழிகாட்டுமென்று வெளியிட்டார்.

"இந்தப் பழைய சமூகத்தில் நாம் இருக்க முடியாது. புதிய சமூகத்தை அமைக்கவேண்டும்; என்று எக்காரணம்பற்றியும் நீங்கள் கூறக்கூடாது. அதனால் சமூகத்திற்கு ஒருவித நன்மையுங் கிட்டாது. நீங்கள் ஒரு புது ஜாதியாராகலாம். உங்களுக்காகப் புது விவாகச்சட்டம் அமலாகலாம். நீங்கள் குறை காணும் கொடுமையான வழக்கங்களை மாற்றவோ அல்லது கஷ்டப்படுவோருக்குச் சௌகரியம் பண்ணவோ உங்களால் முடியாமற் போகும். ஆகவே கூடியவரையில் நீங்கள் தலைவிரித்தாடக் கூடாது."

இவ்விதம் மணி ஐயர் உயர்தரமான கொள்கைகளை வெளியிட்டார். இவர் வெளியிட்ட ஒவ்வொரு வார்த்தை

யும் சீர்தூக்கிச் சிந்தித்துப் பார்க்கத்தக்கதாகும். இவர் நடுக்கிடந்த நியாயத்தையே எடுத்துச் சொன்னார்; நிதானமான மார்க்கத்தையே நாடினார். அவசர புத்தி அநர்த்தத்திலேயே முடியும் என இவர் நம்பினார். சாஸ்திர விஷயங்களிலும் சிரத்தை பூண்டார்; சீர்திருத்தத்திலும் சீரிய நாட்டம் காட்டினார்.

இந்த மகா நாட்டில் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறின. ஒரே வகுப்பில் இருக்கும் உட்பிரிவினர் சம பந்தி போஜனம் பண்ணுவதை மகாநாடு வற்புறுத்தியது. பொது வாழ்வில் ஈடுபட்ட ஒவ்வொருவருடைய சொந்த வாழ்க்கையும் தூய்மையும் ஒழுக்கமும் நிறைந்ததாக வேண்டும் என்பதும், சீர்திருத்தக்காரர்கள் ஒவ்வொருவரும் தங்கள் லக்ஷியத்திற்கு அனுகுணமாக வாழ்க்கையை நடத்தவேண்டும் என்பதும் மற்றொரு தீர்மானத்தின் ஸாரம் ஆகும்.

சென்னைக்கு ஸ்வாமி விவேகானந்தர் விஜயம் செய்த போது அந்தப் பெரியார் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார். அப்போது ஜஸ்டிஸ் மணி ஐயர் அக்கிராஸனம் வகித்தார். ஸ்வாமிகள் இவரைப்பற்றிப் பேசியது பின் வருமாறு:

> "ஜஸ்டிஸ் சுப்பிரமணிய ஐயருக்கு எனது ஆழ்ந்த நன்றி உரித்தாகும். உட்கருத்தை அறிவதில் இவர் ஒரு மேதாவி. இந்த வாழ்க்கையில் எனக்கு வாய்த்த உன்னதமான நண்பர் இவர். உண்மையான அன்பர். இந்தியாவின் உண்மையான குழந்தை!"

6

## நேர்மையான நீதிபதி

ஸர் டி. முத்துஸாமி ஐயரின் மரணத்திற்குப் பிறகு மணி ஐயர் 1895-ஆம் வருஷம் ஜனவரி மாதம் நீதிபதியாக உயர்த்தப்பட்டார். இதற்கு நான்கு வருஷங்களுக்கு முன்பு இவர் ஒரு முறை இந்தப் பதவியைச் சிலகாலம் வகித்தார். முதல் முதல் ஹைகோர்ட்டு ஜட்ஜாக உயர்த்தப்பட்ட வக்கீல் இவர்தாம். ஆதலால் இவர் நீதிபதியாக எவ்விதம் நடப்பாரோ என்ற சந்தேகம் பலருக்கு இருந்ததுண்டு. ஆனால் நாளடைவில் இவருடைய தீர்ப்புகள் இந்த அநாவசியமான எண்ணத்திற்கு இடமில்லாதபடிச் செய்துவிட்டன. நீதிபதியாக இருந்த காலத்திலும் இவர் பொதுஜனங்களின் நன்மைக்குரிய விதத்திலேயே நடந்துகொண்டார். தமது நேர்மையான குணத்தினாலும் நடத்தையினாலும் இவர் நிகரற்று விளங்கினார். தமது தீர்ப்புகளில் இவர் நியாய புத்தியையே காட்டினார்.

1891-இல் இவர் நீதிபதியாக நியமிக்கப்பட்டபோது, "ஹிந்து"ப் பத்திரிகை எழுதியது பின்வருமாறு: "ஐரோப்பிய நீதிபதிகளைவிட இந்திய நீதிபதிக்கே அதிகப் பொறுப்பு இருக்கிறது. ஹிந்து சட்ட விதிகளும் ஆசார நியமங்களும் சீர்குலைந்த ஸ்திதியில் இருக்கின்றன. இவற்றைத் திருப்திகரமான விதத்தில் ஆளுவதற்குத் தைரியமும், நேர்மையும், பரிவும் அதி அவசியம். ஸர்க்கார்,

பொதுஜனம் இவ்விரண்டின் நம்பிக்கையையும் பெற்ற ஹிந்துப் பிரமுகர் ஒருவர் உண்டெனில் அவர் சுப்பிரமணிய ஐயர்தாம் எனக் கூறவேண்டும்." "ஹிந்து சமூக முன்னேற்றத்திற்காக நீதிபதி என்ற முறையிலும் சுப்பிரமணிய ஐயர் வழிகாட்டுவார் என்று எதிர்பார்க்கிறோம்" என "ஹிந்து"ப் பத்திரிகை 1895-இல் மறுமுறை எழுதியது.

தம்மிடம் யாவரும் வைத்திருந்த நம்பிக்கை நியாயமானதே என்பதை மணி ஐயர் நிரூபித்தார். ஹிந்து ஸ்திரீகளின் உரிமைகளைப்பற்றிய பல வழக்குகளில் இவர் அளித்த தீர்ப்புகள் முன்னேற்றத்திற்கு உதவின. சட்டத்தில் காணும் வெறும் வார்த்தையை மாத்திரம் இவர் பெரிதாக மதித்ததில்லை. அதன் உட்கருத்தை அறிந்து தாராள புத்தியுடனும் தயாள குணத்துடனும் இவர் நடந்துகொண்டார். இவரது நோக்கம் சிரியது. ஒரு கொலையில் சம்பந்தப்பட்ட ஒருவர், கொலை செய்யப்பட்டவரது சொத்துக்கு வார்ஸாக இருக்கலாமா என்ற பிரச்னை எழும்பியது ஒரு சமயம். இது விஷயத்தில் ஹிந்து லா ஒரு விதியையும் குறிப்பிடவில்லையெனினும், தீர்ப்பளிக்குமுன் நியாயமும் நேர்மையுந்தான் முன்நிற்க வேண்டும் என்றார் இவர்.

ஸ்திரீகளின் உரிமைகளை இவர் ஆதரித்தார். ஸ்திரீ தனம் சம்பந்தமாக விஜ்ஞானேசுவரர் எழுதியவை, ஸ்மிருதிகளில் கூறப்பட்ட நிலைமையை மாற்றிவைத்ததாகவும், சொத்துரிமை விஷயத்தில் அவர் ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் சமமான ஸ்தானத்தை வழங்கியதாகவும் இவர் எடுத்துக்காட்டினர். முதலில் ஸ்வீகாரம் செய்துகொண்ட பிள்ளை இறந்துவிட்டதால், ஒரு விதவை மறுபடியும் ஸ்வீகாரம் பண்ணிக்கொள்ளக் கூடாது

என்று கொண்டுவரப்பட்ட வழக்கில், ஸ்வீகாரத்தை ஆதரித்து இவர் தீர்ப்புக் கொடுத்தார். இந்தத் தீர்ப்பை ஆக்ஷேபித்து ப்ரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்து கொண்டனர். அங்குள்ள நீதிபதிகள் இவரது தீர்ப்பையே ஆமோதித்தனர், அப்போது இவரைப்பற்றிச் "சிறப்பு மிகுந்த ஒரு ஹிந்து வக்கீல்" என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

ஒரு ஹிந்து ஸ்திரீ, காலஞ்சென்ற தன் கணவனது சொத்திலிருந்து அவ்வப்போது சேமித்துவைக்கும் பணம் அவளுக்கே சொந்தமில்லையென்றும், அதை அவள் தன் இஷ்டப்படி விநியோகம் பண்ணக்கூடாது என்றும், மற்றொரு வழக்கில் விவாதிக்கப்பட்டது. மணி ஐயர் தமது தீர்ப்பில் ஹிந்து விதவைக்கு உரிமை உண்டென்றார். தன் கணவன் சொத்திலிருந்து தனது முயற்சியால் சேகரித்த பணம் அவளையே சேர்ந்ததென்றும், அது அவள் இஷ்டப்பிரகாரம் செலவழிக்கக் கூடியதுதான் என்றும் இவர் நிர்ணயித்தார்.

இம்மாதிரி, ஸ்திரீகளது உரிமைகளைப் பல தீர்ப்புகள் மூலம் ஸ்தாபித்தது தவிர, இவர் குடி பாத்தியதையையும் பலமாக ஆதரித்தார். 1905-ல் லார்ட் ஆம்ப்தில் ஒரு பிரசங்கத்தில், "ஜஸ்டிஸ் ஸர் சுப்பிரமணிய ஐயருக்குத் தான் எவ்வளவு கடமைப்பட்டவன் என்பதைத் தென் னிந்திய வியவசாயி நன்குணரமாட்டான் என்று பிறர் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன்" என்றார்.

1899-இல் தலைமை நீதிபதி ஸர் ஆர்தர் காலின்ஸ் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். அந்த ஸ்தானத்திற்கு இவரே தாற்காலிகமாக உயர்த்தப்பட்டார். தம் குமாரர் உந்நத பதவிக்கு உயருவதைக் கண்குளிரக் கண்ட மணி ஐயரின் தாயார் 1899-இல் காலமானார்.

அவரது வியோக தினத்தன்று துக்கம் விசாரிக்க, திவான் பகதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார் சென்றபோது, மணி ஐயர் தம் நண்பரிடம் தாம் பத்தாவது தினம் வரையில் ரஜா எடுத்துக்கொள்ளப்போவதில்லை என்று தெரிவித்தார். தமது கடமையில் இவர் கொண்ட ஊக்கமே இதற்குக் காரணமாக இருந்தபோதிலும், திவான்பகதூர் ஸ்ரீநிவாஸராகவையங்கார், இவரைப்போன்றவர்கள் இத்தகைய சந்தர்ப்பங்களில் ரஜா எடுத்துக் கொள்வது உசிதமாகும் என்றும், இவர்கள் அம்மாதிரிச் செய்யாவிட்டால் கீழ்த்தர உத்தியோகஸ்தர்களின் ஸ்திதி சங்கடமாகிவிடும் என்றும், அவர்களுக்கெல்லாம் இத்தகைய சந்தர்ப்பங்களில் ரஜா கிடைக்காமல் போகும் என்றும் இவரிடம் எடுத்துரைத்தார். இது மணி ஐயருக்கு மிகவும் யுக்தமாகத் தோன்றியதால் தம் நண்பரின் விருப்பத்திற்கு இணங்கி தமது கருத்தை மாற்றிக்கொண்டார்.

அடுத்த வருஷம் ஜனவரி மாதம் மணி ஐயருக்கு "ஸர்" (கே. ஸி. ஐ. இ) பட்டம் வழங்கப்பட்டது. 1903-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் சீப் ஜஸ்டிஸ் பதவி இவருக்கு மறுமுறை வழங்கப்பட்டது. முதலில் அதை ஏற்க இவர் மறுத்துவிட்டார். கவர்னரான லார்ட் ஆம்ப்தில் வற்புறுத்தியதன்பின் இவர் அதற்கு இணங்கினார்.

"தாங்கள் தேக அசௌக்கியமாயிருப்பதைப் பற்றியும், ஆக்டிங் சீப் ஜஸ்டிஸ் பதவியை ஏற்கத் தாங்கள் சம்மதிக்காததுபற்றியும் அறிய வருந்துகிறேன். தங்களுடைய தேக அசௌகரியம் நீடித்திருக்காது என்றும், ஸர் ஆர்னல்ட் ஓயிட் சென்னையை விட்டுப் புறப்படுமுன் தாங்கள் சுகமடைவீர்கள் என்றும் நான் நம்புகிறேன்......ஏதோ தற்காலிக தேகஅசௌ

கரியத்தை உத்தேசித்து, தங்களுக்கு உரித்தான ஒரு பதவியைத் தாங்கள் இழப்பது எனக்கு அதிக விசனத்தைத் தருவதாகும். தங்கள் தேக நிலைமையைப்பற்றி எனக்கு அடிக்கடி தெரியப்படுத்த வேண்டும்"—(25-10-1903.)

இவ்விதம் எழுதினார் லார்ட் ஆம்ப்தில், மணி ஐயருக்கு. இப்பெரியாரிடம் அவர் கொண்ட நன் மதிப்புக்கு இது உன்னதமான சான்றல்லவா? மணி ஐயர் அதற்கு இணங்கினார். மறுபடியும் 1906-இல் அந்த உயர் பதவியை இவர் நிர்வகித்தார். மறுவருஷம் பதவியிலிருந்து விலகுவதற்குச் சற்று முன்பும் அந்த உன்னத ஸ்தானத்தை இவர் அலங்கரித்தார்.

முத்துஸ்வாமி ஐயரும் மணி ஐயரும் நீதிபதிகளாக நியமிக்கப்பட்ட காலத்தில், அறுபதாம் ஆண்டு நிறைவேறியவுடன் விலகவேண்டும் என்ற விதி இல்லை: தங்களால் முடிந்தவரையில் பதவி வகிக்க விதி இடம் அளித்தது.

இவ்வாறு 12 வருஷ காலம் சீருடனும் சிறப்புடனும் வேலைபார்த்து இவர் விலகிக்கொண்டார். 1907 - ஆம் வருஷம் நவம்பர் மாதம் 13-ஆம் தேதி இவர் உத்தியோகத்திலிருந்து ஓய்வெடுத்துக்கொண்டார். தேக அசௌக்கியம் காரணமாக ராஜினாமாச் செய்வதாக இவர் அறிவித்தார். இவர் இன்னும் எட்டு மாதங்கள் வேலை பார்த்திருந்தால் இவருக்கு வருஷத்திற்கு 1200 பவுன் பென்ஷன் கிடைத்திருக்கும்; முன்னதாகவே விலகி விட்டதால் 880 பவுன் பென்ஷனே கிடைத்தது. இவர் இன்னும் எட்டு மாத காலம் வேலை பார்க்கச் சம்மதித்தால் இவருக்குச் சிரமம் இல்லாதபடி வேலையை வகுத்துத் தருவதாகவும் சீப் ஜஸ்டிஸ் கூறிப் பார்த்தார்.

அவ்வருஷம் ஸெப்டம்பர்மாதத்தில் உத்தியோகத்தை விட்டுத் தாம் விலகப்போவதாக இவர் கவர்னரான ஸர் ஆர்தர் லாலிக்குத் தெரிவித்தார். அக்டோபர் மாதம் 3-ஆம் தேதி ஸர் ஆர்தர் லாலி இவருக்குப் பின்வரும் கடிதத்தை அனுப்பினார்.

"ஹைக்கோர்ட் ஜட்ஜ் ஸ்தானத்தை விட்டு விலகத் தாங்கள் விரும்புவதை அறிந்து விசனம் அடைந்தேன். தாங்கள் விலகிக் கொள்வது பொது ஜனங்களின் துரதிருஷ்டம் என்றே நான் கருதுகிறேன். தங்களது இந்த முடிவுக்கான காரணங்களை அறிந்த நான், இதைப்பற்றிப் புனராலோசனை பண்ணும்படித் தங்களைக் கேட்டுக் கொள்வது உசிதமாகாது."

சென்னை ஸர்க்காரும் கெஜட்டில் விசேஷ அறிக்கையொன்றை வெளியிட்டனர். அதில் அவர் செய்த சேவை சிலாகிக்கப்பட்டது. கவர்னர் பிரபு தமது பாராட்டுதலை வெளியிட்டிருந்தார். இவரது 'மேன்மையான நடுநிலையும் சுதந்திரமான நடத்தையும், பரந்த படிப்பும்' அவ்வறிக்கையில் முக்கியமாகக் குறிப்பிடப் பட்டிருந்தன. ஸர்க்காரும் பொது மக்களும் அநேக காலம் வரை இவரது பெயரைக் கொண்டாடுவார்கள் என்றும் அவ்வறிக்கை தெரிவித்தது.

இது தவிர, பல பத்திரிகைகளும் இவரைப் பாராட்டி எழுதின. வக்கீல்கள் இவரிடம் விசுவாஸம் கொண்டனர் என்றும், குற்ற வழக்கு விசாரணையில் இவர் நிபுணராயிருந்தார் என்றும், இவர் உத்தியோகத்தைத் துறந்தது மாகாணத்திற்கு அளவிட முடியாத நஷ்டம் என்றும் "மதராஸ் மெயில்" எழுதியது. இப்போது "சென்னையில்

அதிகப் பெருமை வாய்ந்தவர் ஸர் சுப்பிரமணிய ஐயர் ஒருவர்தாம்'' என்று "மதராஸ் டைம்ஸ்'' வரைந்தது.

இவர் பதவியை விட்டுப் பிரிந்த மறுதினம் நடந்த ஒரு சம்பாஷணை இங்கே குறிப்புக்குரியதாகும். மகாமஹோபாத்தியாய சாமிநாதையர் இவரைப் பார்த்து, "இன்னும் சில மாதங்கள் வேலை பார்த்து அதிகப் பென்ஷன் பெற்றிருக்கலாமே'' என்றார். அப்போது இவர், 'அவ்வளவு மாதங்கள் நிர்ப்பந்தத்திற்கு அடங்கியிராமல் விடுதலை பெற்றதுதான் எனக்குச் சந்தோஷம். இனிமேல் ஈசுவரத்தியானம் செய்துகொண்டு இருக்கலாம். பணத்திற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? பரோபகாரம் செய்ய முடியாமல் நிர்ப்பந்தங்களில் அகப்பட்டுக்கொண்டு இருப்பதைவிடச் சீக்கிரமே விலகிவிடுவது நல்லதல்லவா? இனிமேல் நான் சர்வ சுதந்திரன்'' என்று பதில் அளித்தார். இத்தகைய மனோபாவம் எல்லோருக்குமா இருக்கமுடியும்? இந்த விரக்தியும் வைராக்கியமும் இவர் போன்ற விரதசீலர்களுக்குத்தான் வரும் அல்லவா?

## 7

## கல்வியிலே கருத்து

கல்வி அபிவிருத்தி அடைந்தால்தான் தேசம் கதி மோக்ஷம் பெறும் என்பதை மணி ஐயர் வெகு சீக்கிரத்திலேயே கண்டுகொண்டார். 1882-ஆம் ஆண்டிலேயே, கிடைக்கும் பணம் முழுவதையும் ஆரம்பக்கல்விக்காகச் செலவழிக்கவேண்டுமென்றார் இவர். ஸ்தலஸ்தாபனங்கள் இதைக் கடமையாகக் கொள்ளவேண்டும் என்று இவர் கருதினார். மணி ஐயர் சென்னைக்கு வந்த பிறகு, 1886-ஆம் வருஷம் ஜூலை மாதம் மயிலையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் மணி ஐயர் தலைமை வகித்தார். ஸர். டி. முத்துஸ்வாமி ஐயரும் திவான்பஹதூர் ஆர். ரகுநாத ராவும் பிரசங்கம் புரிந்தனர். "இக்காலத்துக் கல்விமுறை பரிபூரணம் அடைந்துவிட்டதா? அல்லது அதில் குறை இருக்கிறதா?" என்பதே பிரசங்க விஷயம். மணி ஐயர் தமது தலைமையுரையில் இந்தக் கல்வி முறையில் இருவிதமான குறைகள் இருப்பதாகவே கூறினார். புத்திக்கூர்மையை அதிகமாக்குதற்கும் மத போதனைக்கும், ஒழுக்கமுறைப் பயிற்சிக்கும் இதில் இடம் அளிக்கப்படவில்லை என்று இவர் தெரிவித்தார். எந்தக் கல்வித் திட்டத்திலும் அவரவர் மத சம்பந்தமான விஷயங்களைப் போதிக்க வழிகோல வேண்டும் என்பதை இவர் அச்சமயம் வற்புறுத்திச் சொன்னார்.

சென்னைச் சர்வகலாசாலை ஸெனெட் சபை அங்கத்தினராக மணி ஐயர் 1885-ஆம் ஆண்டிலேயே நியமிக்கப்பட்டார். இதற்கப்புறம் 22 வருஷ காலம் இவருக்குச் சர்வகலாசாலையுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது. ஸின்டிகேட் அங்கத்தினராகவும் இவர் சில வருஷ காலம் இருந்தார். சர்வகலாசாலை விஷயத்தில் இவர் அதிக சிரத்தை காட்டினார். நம் நாட்டு இளைஞர்களின் அறிவும் ஒழுக்கமும் வளருவதற்கான முறையில் உயர்தரக் கல்வி அளிக்கப்படுவதற்காக இவர் உழைத்தார். இது தவிர, மாணவர்களுக்கு அதிகப்படியான பாடம் வைக்கப்படுவதாகவும், அதனால் அவர்களது உண்மையான சாமர்த்தியம் வெளிவராமல் மறைந்து போவதாகவும், ஆகவே பாட புத்தகங்களைக் குறைத்துவிட வேண்டும் என்றும் இவர் வாதித்தார். ஸர்க்கார் உத்தியோகத்திற்கு அருகதை பெற மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேர்ச்சி பெறுவதே போதும் என்று இருந்துவந்த நோக்கத்தை நீக்கிவிட இவர் முயன்றார்.

1898-ஆம் வருஷத்தில் சர்வகலாசாலைப் பட்டதாரிகளுக்குப் பிரசங்கம் புரியும் கௌரவம் இவருக்கு வழங்கப்பட்டது அச்சமயம் இவர் செய்த பிரசங்கம் மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு வாக்கியமும் மனப்பாடம் பண்ணத் தக்கதாம். அப்போது இவர் கல்வி கற்பதன் நோக்கம் யாது என்பதை விவரித்தார். இவ்வுலகின் கௌரவமான வாழ்க்கையை நடத்த வழி காட்டுவதே அதன் பயன் என்றார் இவர். பணம் சம்பாதித்துத் தம் வயிற்றை வளர்க்கத்தான் படித்தோமென்று எண்ணலாகாது என்றும், அவரவர் கடமையை நிறைவேற்றவே அறிவு பெற்றதாக நினைக்கக் கூடாது என்றும், மூளையின் சக்தியைப் பெருக்கிக் கல்வியின்

கௌரவத்தைப் பாதுகாக்கவே அதை ஸ்வீகரித்ததாக ஒவ்வொருவரும் கருதவேண்டும் என்று கூறினார் மணி ஐயர். ஆத்ம பரிசுத்திக்கே வித்யாபிவிருத்தி உபயோகமாக வேண்டும் என்பது இப்பெரியாரின் திடமான அபிப்பிராயம். இதற்கப்புறம் பெண் கல்வியின் அவசியத்தையும் இவர் விரித்துரைத்தார். ஸம்ஸ்கிருத பாஷை செழித்திருக்கும்படிச் செய்ய எல்லோருடைய சகாயத்தையும் மணி ஐயர் எதிர்பார்த்தார், ஆங்கிலக் கல்வி காரணமாக நம் நாட்டார் தங்கள் புராதனக் கலைகளை அலக்ஷியம் செய்துவிட்டார்களென்ற குற்றச் சாட்டு உண்மையானதே என்றும், இனியாவது ஹிந்துக்கள் தங்கள் பழைய செல்வங்களைப் பாதுகாத்து வர வேண்டுமென்றும் தெரிவித்தார்.

1904-ஆம் வருஷம் சில மாத காலம் மணி ஐயர் சர்வகலாசாலை உப அத்யக்ஷகர் பதவியையும் வகித்தார். இவருக்கு முன்பு இந்த ஸ்தானத்தை வேறு ஓர் இந்தியரும் அலங்கரித்தது கிடையாது. இவர் சர்வகலா சாலைக்கும், பொதுவாகக் கல்வி அபிவிருத்திக்கும் செய்த சேவையை முன்னிட்டு, 1908-இல் சர்வகலாசாலையார் இவருக்கு "டாக்டர்" பட்டத்தை அளித்தனர். இவ் வருஷம் மார்ச்சு மாதம் 19-ஆம் தேதி பட்டமளிப்பு விழா மிகச் சிறப்புடன் நடைபெற்றது. கவர்னர் நேரில் இவருக்குப் பட்டத்தை வழங்கினார். "இந்த விழா மிகச் சிறப்பாக நடந்தது. மிகப் பெருமைவாய்ந்ததாகவும் இருந்தது. எளிதில் வழங்கப்படாத கௌரவப் பட்டம் ஐயருக்கு அளிக்கப்பட்டவுடன் வந்திருந்தவர்கள் நீண்ட ஆரவாரம் செய்தனர்" என்று பத்திரிகைகள் குறிப் பிட்டன. மணி ஐயருக்குக் கிடைத்த இந்தக் கௌரவம் மிகவும் அபூர்வமானதுதான். சர்வகலாசாலை ஸ்தாபித

மாகி ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாகியும், இதற்குமுன் வேறு ஓர் இந்தியருக்கும் இத்தகைய உயர்ந்த பட்டம் அளிக்கப்பட்டது இல்லை. இதற்கு முன்பு இம்மாதிரி பாராட்டப்பட்டவர் டாக்டர் வில்லியம் மில்லர் ஒருவர் தாம். இந்த விழாவில் பட்டதாரிகளுக்கு உபதேசம் பண்ணிய ஸர். ஸி. சங்கரன் நாயரும் மணி ஐயரைப் பாராட்டிப் பேசினார்.

மயிலை பி. எஸ். ஹைஸ்கூல் ஸ்தாபனத்திற்குக் காரணமா யிருந்தவர் நம் மணி ஐயர்தாம். பென்னாத்தூர் சுப்பிரமணிய ஐயர் காலமானபோது தம் சொத்துக்களைத் தர்ம விஷயத்தில் விநியோகிக்கும்படி மணி ஐயரைக் கேட்டுக்கொண்டார். கடைசியில் மணி ஐயர் ஒரு பள்ளிக் கூடத்தை ஸ்தாபிக்க முடிவு செய்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். தர்ம நிர்வாக சபையையும் இவர் நிறுவினார்; அதன் தலைவராகவும் இருந்து இவர் வெகு காலம் சேவை புரிந்தார், பள்ளிக்கூடத்தை 1905-ஆம் வருஷம் ஜனவரி மாதம் மகர சங்கராந்தி தினத்தன்று இவரே திறந்துவைத்து, மத போதனையில் மக்கள் உள்ளத்தில் உதிக்கும் தூய்மையான உணர்ச்சியைக் குறித்தும், கல்வியின் நோக்கத்தைப் பற்றியும் விரிவாகப் பேசினார்.

இரண்டு ஸம்ஸ்கிருத வித்வந் மணிகளுக்கு "மஹாமஹோபாத்தியாயர்" என்னும் பட்டம் கிடைக்க இவரே சிபார்சு செய்தார். ஸம்ஸ்கிருத பாஷாபிவிருத்தியில் இவருக்கு அதிகக் கவனம் இருந்தது. பழைய நாளைய பழக்க வழக்கங்களைப் பின்பற்றும் பண்டித வர்க்கத்தார் நவீனமுறைக்கு ஏற்றபடி ஸம்ஸ்கிருதக் கல்வியைக் கற்பிக்க வேண்டும் என்று இவர் விரும்பினார். நமது சமூகத்தில் வேரூன்றியிருக்கும் விபரீதங்களை விலக்க

வித்துவான்களின் உதவியே பிரதானம் என்பது இவரது எண்ணம். இந்த நோக்கத்துடன் இவர் 1912-இல் பண்டித பரிஷத் ஒன்றைக் காஞ்சீபுரத்தில் கூட்டினார்; அதற்கு இவரே அக்கிராஸனம் வகித்தார். அப்போது பண்டிதர்கள் இங்கிலீஷ் படித்து, காலத்திற் கொத்தபடி ஆராய்ச்சி நடத்துவதற்காக ஒரு சங்கத்தை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார். அச்சமயம் பண்டிதர்களுக்கு இந்த யோசனை வேடிக்கையானது எனத் தோன்றியிருக்கக்கூடும்! இதற்கப்புறம் சில வருஷங்களுக்குள் மற்றொரு மகாநாடு இவரது முயற்சியால் திருவையாற்றில் கூடியது.

மணி ஐயருக்கு மதபேதம் இல்லை. ஒன்றை உயர்த்தி மற்றொன்றைத் தாழ்த்திப் பேசும் குணம் இவர்பால் இல்லை. மஹாமஹோபாத்தியாய கபிஸ்தலம் தேசிகாசார்யரைத் திருப்பதியிலிருந்து சென்னைக்குத் தமது கிருஹத்திற்கு வரவழைத்து அவரிடம் சங்கர பாஷ்யத்தையும் ராமாநுஜ பாஷ்யத்தையும் கிரமமாகப் படித்தார். பகைமையின்றி வாழ இவர் வழி தேடினார்.

1916-ஆம் வருஷம் டிஸம்பர் மாதம் கூடிய முதலாவது சென்னை மாணவர் சம்மேளனத்தில் தலைமை வகித்து இவர் கூறியவை இன்றும் நாம் போற்றுதற்குரியன. தமது ஆழ்ந்த அறிவு, பரந்த படிப்பு, அகன்ற அனுபவம் ஆகியவை காரணமாகத் தமக்குத் தோன்றிய சில அபிப்பிராயங்களை இவர் எடுத்துச்சொன்னார். புராதனகாலப் பிரும்மசர்ய விதிகளைத் தற்கால வித்தியார்த்திகள் பின்பற்றுததால் அவர்களுக்குப் பலவிதக் கேடுகள் விளைந்திருப்பதாகக் கூறினார்.

“பிரும்மசரியம் போய்விட்டது. இதனால் இளைஞர்களுக்கு விரைவில் குழந்தைகள் பிறப்ப

துடன் மனவலிமையும் இருப்பதில்லை. இதன் பிறகு, குடும்பத்தைப் பாதுகாப்பதற்காகச் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆவல் பிறப்பதால் பலவகைத் தீமைகள் சம்பவிக்கின்றன. நாமோ நமது கல்விமுறையைத் தாக்கி அதிகாரிகள் மீது சீறி விழுகிறோம். இத் திட்டத்தை முழுதும் மாற்றிவிடவேண்டும் என்று விரும்புபவர்களுள் நானும் ஒருவன்தான்; இதை ஒழித்துவிடுவதுகூட உசிதமேயாகும். ஆனால் இந்த முறை நாட்டில் நிலவி வருவதற்கு நாமே காரணமானவர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நாம் இதைப் பலமாக ஆக்ஷேபித்து நமது கருத்தைக் காரியத்தில் காட்டாததே, இது இன்றளவும் நீடித்து வருவதற்குக் காரணம். நம் இளைஞர்கள் சீக்கிரத்தில் சம்பாதிக்கவேண்டும் என்ற ஆசையினால், ஸர்க்கார் நிறுவிய முறைக்குத் தடைசொல்லாமல் படித்து வந்திருக்கின்றனர். இப்போது நாம் பரீக்ஷையில் தேருத பி. ஏ.க்களையும் தகுதியற்ற மெட்றிகுலேட்டுகளையும் காண்கிறோம். உங்களுக்கு அளிக்கப்பட்டு வரும் இந்தக் கல்வியை ஏற்றுக்கொள்ள மறுப்பது உங்கள் பொறுப்பு. அதாவது படிக்கும் நாளில் நீங்கள் வாளாவிருக்கவேண்டும். பகுத்தறிவு பெறுவதற்குப் பதிலாகப் பரீக்ஷையில் தேறுவதிலேயே உங்களுக்கு நாட்டம் இருக்கிறது. இவ்விஷயத்தில் உங்கள்மீது யார் குறைகூற முடியும்? என்னைப் பற்றியவரையில் நான் உங்களிடம் குறைகாண மாட்டேன். ஒருவர் பௌதிகம் அல்லது தத்துவ சாஸ்திரத் துறையில் ஆழ்ந்து படிக்கும்போது வீட்டில் குழந்தை கத்தினால் எவருடைய மனந்தான் மாறிவிடாது? ஆகவே, மனுதர்மத்தைக் கடை

பிடித்து, கலாசாலையில் படிக்கும் நாளில் பிரும்ம சரியத்திலிருந்து வழுவாதீர்கள்."

இவ்விதம் கோஷித்தார். மணி ஐயர் அச்சமயம் இரண்டு வருஷங்களுக்கப்புறம் சென்னையில் தேசியக் கல்வி வாரம் கொண்டாடப்பட்ட போதும் இவர் பொன்னேபோல் போற்றத்தக்க பிரசங்கத்தைப் புரிந்தார்.

"இங்கிலீஷ் கல்விமுறைக்காக நாம் நமது நன்றியைத் தெரிவித்துவிட்டு, அது இனிமேல் நமக்கு வேண்டாம் என்கிறோம்; நாம் கோருவது வேறு ஓர் உத்தமமான முறை. கல்வியின் லக்ஷியம் என்ன? சில பிராம்மணர்களைப் பெரிய உத்தியோகஸ்தர்களாக்குவதுதானா? நாட்டின் ஏழை மக்களின் நிலை உயர வழிகாட்டுவதல்லவா அதன் கடமை? தாய்ப் பாஷைகளில் பாடம் போதித்தால் பொது மக்களுக்குப் பலன் உண்டாகும். தங்களது சொந்த மொழிகளின் மூலமாகவே மேனாட்டுச் சாஸ்திரங்களை மக்கள் படித்தறியவேண்டும் என்பதற்கே நாம் தேசியக் கல்வியைக் கோருகிறோம்."—(14-4-1918)

இதே சந்தர்ப்பத்தில் மேனாட்டுக் கல்வி முறையினால் பிராம்மண வகுப்பாருக்கே அதிகமான பாதகம் ஏற்பட்டதாகவும் இவர் குறிப்பிட்டார்.

மணி ஐயருக்குத் தமிழ்ப் பாஷையிடம் அதிகப் பற்றுதல் உண்டு. இவர் தமிழ் நூல்களைப் படித்தும் படிப்பித்துக் கேட்டும் வரும் பழக்கம் கொண்டிருந்தார். பலமுறை தமிழில் பிரசங்கங்கள் இவர் புரிந்ததுண்டு. தமிழிலே பேசிப் பழகவேண்டியதன் அவசியத்தை இவரே முதலில் வற்புறுத்தியதாக மகாமகோபாத்தியாய சாமிநாதையர் எழுதியுள்ளார். "நம்மவர்கள் இங்கிலீஷ்ப்

பாஷையைப் படித்துப் படித்து அந்தப் பாஷையிலேயே நினைப்பதற்கும் பேசுவதற்கும் பழக்கம் செய்துகொண்டு விட்டார்கள். நம்முடைய தாய்ப் பாஷையிலேயே விஷயங்களை நினைக்க முடிவதில்லை. தமிழிலே பேசுவதை அகௌரவமாக நினைத்துகொள்கிறார்கள். அது மிகவும் தப்பான எண்ணம். நான்கூட இங்கிலீஷ் அப்பியாஸம் செய்த தோஷத்தினால் சில சில வாக்கியங்களை இங்கிலீஷில் நினைத்து அப்பால் தமிழிலே பேசுகிறேன்" என்றார் இப்பெரியார் ஒருசமயம். இதிலிருந்து இவர் கல்வி சம்பந்தமாகவும், தாய்மொழி வளர்ச்சி பற்றியும் எவ்வளவு அக்கறை காட்டினார் என்பது நன்கு விளங்கும். மேனாட்டு முறையைத் தழுவுவதால் நமது பண்டைய ஒழுக்கத்தைத் துறந்துவிடக் கூடாது என்பதே இவரது ஸித்தாந்தம். நமது அறிவை எவ்விதத்தினாலும் வளர்த்துகொண்டு போகவேண்டுமே தவிர, நம் நாட்டு அறிவாளிகள் நமக்களித்துச் சென்ற அருந்தனத்தை நாம் அழித்துவிடக்கூடாது என்பது இவரது வாழ்க்கையின் லக்ஷியமாக அமைந்திருந்தது.

## 8

## தேசத்திற்குத் தொண்டு

மணி ஐயர் நீதிபதி ஸ்தானத்திலிருந்து விலகிய வுடனேயே மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் சம்பந்த மாக இவரது அபிப்பிராயத்தை சென்னைத் துரைத் தனத்தார் கேட்டனர். தம் கண்பார்வை மங்கியிருந்த படியால் இவர் இதற்கு இணங்க இயலவில்லை. இதற் கப்புறம் 1908-இல் மாகாணத்தில் பலவிடங்களிலும் ஸர்க்காருக்கு எதிராக ராஜீயப் பிரசாரம் நடந்துவந்தது. அப்போது மணி ஐயர் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்வதை ஆதரித்தார். நாட்டிற்கு நன்மையை விளைவித்த பிரிட்டிஷ் ஆட்சியைத் தூஷிக்கலாகாது என்றார் இவர். இதற்காக இவரைச் சில தேசீயப் பத்திரிகைகள் கண்டித்தெழுதின. தர்ம ஸ்தாபனங்களின் நிர்வாகத்திற்காக இவர் தர்ம ஸம்ரக்ஷண சபையை ஸ்தாபித்தார். இவ்வாறு சில வருஷங்கள் கழிந்தன.

1914-ஆம் வருஷம் சென்ற மஹா யுத்தம் ஆரம்ப மானபோது, மணி ஐயர் ஒரு பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்துத் தமது ராஜ விசுவாஸத்தைத் தெரி வித்ததுடன் பிரிட்டிஷாரின் வெற்றிக்காகவும் பிரார்த் தித்தார். அவ்வருஷ முடிவில் சென்னையில் கூடிய காங்கிரஸ் மஹாசபையின் வரவேற்புக் கழகத் தலைவர் பதவியை இவர் அலங்கரித்தார். ஜமீன்தார்கள் முதலான

பிரபுக்கள் தேச சேவையில் ஈடுபடவேண்டும்; கிராம வாழ்க்கை சீர்படவேண்டும்; கிராமப்புனருத் தாரணம் ஏற்பட்டால் அரசியல் முன்னேற்றம் தானாகவே ஸித்திக்கும்; தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு கிராமச் சபைகள் எல்லா இடங்களிலும் அமைக்கப்பட வேண்டும்; கிராமப் பஞ்சாயத்துகளும் விருத்தியாக வேண்டும்; ஏழைக் குடியானவனின் கடன் பளுவைப் போக்க வழி தேடவேண்டும்; இதற்காகக் கடன் கொடுக்கும் சங்கங்களை ஸ்தாபிக்கவேண்டும். - இவ்விதம் இவர் யோசனை கூறினார்.

"பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள் சுயவாட்சி பெற்ற ஓர் அங்கமாக இந்தியா மாறும்வரை, அதாவது நமது லக்ஷியத்தை நாம் அடையும்வரை, காங்கிரஸ் மஹா சபையை நாம் கலைக்கக்கூடாது" என்றார் இப்பெரியார். இதுவரை கிடைத்ததைக் காட்டிலும் இனிமேல் கிடைக்கப்போவதுதான் அதிக லாபகரமானது என்ற எண்ணத்துடன் நாம் சேவையில் முனையவேண்டும் என்று இவர் யுவர்களுக்கு உத்ஸாகமூட்டினார். கடைசியில் மத வேற்றுமைகளை ஒழிக்கவேண்டும் என்று இவர் வற்புறுத்தினார்.

இதற்குச் சில மாதங்களுக்குப் பின்பு பெஸண்ட் அம்மையார் ஹோம் ரூல் இயக்கத்தை ஆரம்பித்தார். சுதேசியம், அந்நிய சாமான்களின் பஹிஷ்காரம், தேசியக் கல்வி, சுயஆட்சி - இவைதாம் பெஸண்ட் வகுத்துக் கொண்ட திட்டத்தின் அம்சங்கள். மதனபள்ளியிலிருந்து பிரம்மஞான சபைப் பள்ளிக்கூடத்தைச் சென்னைச் சர்வ கலாசாலையின் ஆதீனத்திலிருந்தும் பிரித்து, அடையாற்றில் ஒரு தேசியப் பாடசாலையை அவர் ஸ்தாபித்தார். ஹோம் ரூல் லீக் ஒன்றையும் அவர் 1915-இல் நிறுவினார்.

மணிஐயருக்கும் பெஸண்டுக்கும் நீடித்தகாலமாகவேநட்பு உண்டு. 1893-இல் ராஜமஹேந்திரபுரத்தில் சந்தித்தது முதல். இருவரும் அந்நியோந்நியமா யிருந்தனர். இருவரும் பரஸ்பர மதிப்புக் கொண்டனர். ஹோம்ரூல் லீக் தலைவர் பெஸண்ட் அம்மையார் ; கௌரவத் தலைவர் மணி ஐயர் ; ஸ்ரீ வாடியாவும் ஸ்ரீ (பிறகு ஸர்) ஸி. பி. ராமஸாமி ஐயரும் இதன் காரியதரிசிகள். 1916-இல் லக்ஷ்மண புரியில் ஐக்கியக் காங்கிரஸ் கூடுமுன், விஷயாலோசனைக் கமிட்டிக்கு மணி ஐயர் ஒரு கடிதம் எழுதினார். அதில், "ஹோம்ரூல் என்பதற்கு, உள்நாட்டு நிர்வாகத்தில் பூரண சுதந்திர உரிமை என்பதே கருத்து" எனவும், "குடியேற்ற நாடுகளில் இருப்பதுபோன்ற சுயஆட்சி முறையைக் கேட்பது உசிதமல்ல" என்றும் இவர் விஸ்தரித்தார்.

1917-ஆம் வருஷம் மே மாதம் கவர்னர் லார்ட் பெண்ட்லண்ட் சட்டசபையில் செய்த பிரசங்கத்தில் ஹோம்ரூல் பிரசாரத்தைத் தடுக்கத் தாம் கடுமையான முயற்சிகளை மேற்கொள்ளப்போவதாகப் பேசினார். இதைப் படித்ததும் மணி ஐயருக்கு ஆத்திரம் பொங்கி யெழுந்தது. உடனே அதற்குப் பதில் எழுதினார் ; அடக்கு முறையைக் கண்டு தாம் அஞ்சி நிற்கப்போவதில்லை என்றார் இந்தத் தீரர்.

"விரைவில் சுயஆட்சியை வழங்கினால் நாட்டிற்கு நன்மை ஏற்படுவதுடன் ஸாம்ராஜ்யத்திற்கும் லாபம் உண்டு என்பதிலும், அதற்காகச் சட்டப்படி கிளர்ச்சி பண்ணவேண்டும் என்பதிலும் என்னுள் நம்பிக்கை நீடித்திருந்து வருகிறது. இந்த நம்பிக்கையுடன்தான் நான் இந்திய ஹோம் ரூல் லீக்கின் கௌரவத் தலைவர் என்ற பதவியை ஏற்றுக்கொண்

டேன். நான் கௌரவமான ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டதற்கு எனது தேகத் தளர்ச்சியே காரணமாகும். இனி நான் பின் வாங்கமாட்டேன். லீக் சட்டவிரோதமானது என்று அறிவிக்கப்பட்டாலும் என் ஸ்தானத்தை விட்டு நான் விலகமாட்டேன். இந்த முடிவுக்காக எந்தத் தண்டனையையும் அனுபவிக்க நான் தயாராயிருக்கிறேன்...ஹோம்ரூல் கோரிக்கையைக் கடைபிடிப்பதே நான் மேற்கொண்ட புனிதமான கடமை. இந்தக் கடமையை நான் கட்டாயம் நிறைவேற்றுவேன். இவ்விதமே நடக்கும்படி என் சகோதரர்களான உங்களையும் நான் வேண்டிக்கொள்கிறேன்.

தமது 75-ஆவது பிராயத்தில் மணி ஐயர் விடுத்த இந்த வேண்டுகோள் நாடு முழுவதிலும் தேசிய உணர்ச்சியைத் உண்டாக்கிவிட்டது. இயக்கத்தின் பலம் அதிகரித்தது. கிளர்ச்சி வலுத்துவந்தது காரணமாக அதே வருஷம் ஜூன் மாதம் 16-ஆந் தேதி பெஸண்ட், ஸ்ரீ அருண்டேல், ஸ்ரீ வாடியா ஆகிய மூவரும் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். அரசாங்கத்தாரின் இந்தச் செயல் மணி ஐயருக்கு மிகுந்த வருத்தத்தையே விளைவித்தது. அவர்களது விடுதலைக்காக இரவுபகல் எனப் பாராமல் இவர் சிரமப்பட்டார்; ராஜப்பிரதிநிதிக்கும் மகஜர் அனுப்பினார். அதே காலத்தில் அலி சகோதரர்களும் சிறைப்படுத்தப்பட்டனர். அவர்களுடைய தாயார், மணி ஐயருக்கு ஒரு நீண்ட கடிதம் அனுப்பினார். இவையெல்லாம் இவரது மனக்கசப்பை விருத்தியாக்கி விட்டன.

இந்தச் சமயத்தில் அடையாற்றுக்கு அமெரிக்காவிலிருந்து ஹென்றி ஹாட்ச்ஸர் தம்பதிகள் வந்திருந்தனர்.

அவர்கள்மூலம் ஜூன்மாதம் 24-ஆந் தேதியிட்ட ஒரு நீண்ட கடிதத்தை அமெரிக்க ஜனாதிபதியான வில்சனுக்கு இவர் எழுதி அனுப்பினார். இந்தக் கடிதத்தில் இந்தியக் கோரிக்கை என்ன என்பதை விவரித்துவிட்டு, யுத்த சமயத்தில் இந்தியாவுக்கு சுயவாட்சியை அளிக்கும் பக்ஷத்தில், ராணுவத்தில் சேர வெகு சீக்கிரத்திலேயே லக்ஷக்கணக்கில் இந்தியர் முன்வருவார்கள் என்று இவர் குறிப்பிட்டார்.

"தங்களுக்கும், ஏனைய தலைவர்களுக்கும் இந்தியாவில் நடக்கும் அக்கிரமமும் அநியாயமும் கொஞ்சங்கூடத் தெரிய இடம் இல்லை. விதேசபாஷையைப்பேசும் அந்நிய உத்தியோகஸ்தர்கள் தங்கள் மனம்போனபடியெல்லாம் எங்களை நடத்துகின்றனர். அதிகச் சம்பளமும் பதவியும் அவர்களே எடுத்துக் கொள்கின்றனர். எங்களுக்குக் கல்வி வசதியைக் கொடுப்பதில்லை. எங்கள் தனத்தைக் கறந்து விடுகின்றனர். எங்கள் சம்மதமின்றித் தாங்க முடியாத வரிகளை விதிக்கின்றனர். தேசபக்திமயமான வார்த்தைகளைக் கூறுவதற்காக, எங்களுள் ஆயிரக் கணக்கானவர்களைச் சிறையில் அடைக்கின்றனர். மிகக் கேவலமான இந்தச் சிறைச்சாலைகளில் அடைபட்டவர்கள் கோரமான வியாதிகளுக்கு ஆளாகி மரிக்கின்றனர்."

இந்தக் கடிதத்தில் பெஸண்ட் அம்மையார் பாதுகாப்பில் வைக்கப்பட்டதையும் தெரிவித்துப் பிரஸிடெண்ட் வில்ஸன் தலையிடவேண்டும் என்று இவர் கோரினார். இந்தக் கடிதம் ஜனாதிபதியிடம் ஸமர்ப்பிக்கப் பட்டது. அவர் உடனே இதைப் பிரிட்டிஷ் மந்திரியிடம்

அனுப்பிவிட்டார். இவ்வாறு மணி ஐயர் செய்தது பிரிட்டிஷாரின் ரோஷத்தைக் கிளப்பிவிட்டது.

இதைப்பற்றி இந்தியா மந்திரியும் ராஜப்பிரதிநிதியும் மேற்கொண்டு என்ன செய்வது என்று ஆலோசித்தது ஒருபுறம் இருக்க, கடிதத்தின் மூலம் நாட்டிற்கு நன்மையே விளைந்தது. இவ்வருஷம் ஆகஸ்ட் மாதம் இந்தியா மந்திரி மாண்டேகு இந்திய சுயஆட்சிக் கோரிக்கையை ஒப்புக்கொண்டு ஓர் அறிக்கையை வெளியிட்டார். இதற்கு அடுத்த மாதம், பாதுகாப்பில் வைக்கப் பட்ட தலைவர்கள் விடுதலை அடைந்தனர். தமது முயற்சிக்கு இவ்வளவு சீக்கிரத்திலேயே பலன் கிடைத்தது மணி ஐயருக்கு மட்டிலாத மகிழ்ச்சியை அளித்தது. அதே சமயத்தில் சென்னையில் ஒரு பிரசுராலயத்தார் மாண்டேகு இந்தியாபற்றிச் செய்த பிரசங்கங்களைத் தொகுத்து வெளியிட்டனர். அதற்கு இவர் ஓர் நீண்ட முகவுரை எழுதினார்.

இந்நாட்டுக்கு அளிக்கவேண்டிய புதிய சீர்திருத்தங்களைப்பற்றி நேரில் இங்கே வந்து விசாரிக்க மாண்டேகு துரை முடிவு செய்தார். அவரும் ராஜப்பிரதிநிதி லார்டு செம்ஸ்போர்டும் இந்தியாவின் பல மாகாணங்களுக்கும் 1917-ஆம் வருஷ இறுதியில் விஜயம் செய்தனர். ஆங்காங்குப் பிரபலஸ்தர்களைச் சந்தித்துப் பேசினர். டிசம்பர் மாதம் அவர்கள் சென்னைக்கு வந்தனர் : 20-ஆம் தேதியன்று மணி ஐயருக்குப் பேட்டி அளிக்கப்பட்டது. அப்போது இவர் அவர்களிடம் ஒரு பெரிய விண்ணப்பத்தை ஸமர்ப்பித்தார். அதில் இவர் இந்நாட்டு ஆட்சி முறையில் இருக்கும் தோஷங்களை எடுத்துக்காட்டி, அவற்றைப் பரிகரிக்க வழிதேடவேண்டும் என்றார்.

அதில் இந்திய ஸிவில் ஸர்விஸ் வர்க்கத்தை இவர்

கடுமையாகத் தாக்கிப் பேசினார்; இந்தியாவின் அதிகாரிகளாயிருப்பவர் இந்நாட்டு மக்கள் விரும்பாத அந்நியர்கள் என்றும், அவர்களது லக்ஷியமும் நாகரிகமும் வேறுவிதமானவை என்றும் இவர் சொன்னார். இந்த ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்கள் தாங்கள் ஏதோ தெய்வாம்சம் பொருந்தியவர்கள் என்று எண்ணிவருவதாகவும், அக்கருத்தின் மிகுதியால் மற்றவர்களை அவர் இழிவாக எண்ணுவதாகவும் இவர் தெரிவித்தார். இதனால் படித்த இந்தியருக்குக் கோபம்வருவது சகஜம் என்பதையும் இவர் வெளியிட்டார். இந்த விண்ணப்பத்திலிருந்து சில பகுதிகளை இங்கு எடுத்துக்காட்டுவது உசிதமாகும்.

"கண்டனத்தைக் கண்டு கலக்கமுறுபவர் இந்தியமக்கள் அல்லர்; அதிகாரிகளே கலங்குகின்றனர். ஆயுதம் தரித்தவருக்கு ஆயுதம் தரிக்காதவரை அடக்கும் காரியம் எளிது; முந்தியவர் காரியத்தில் இறங்க முடியும்; ஆனால் பிந்தியவர் வாய்ப்பேச்சில்தான் வீரம் காட்டமுடியும். கண்டனங்களை அலக்ஷியம் பண்ணும் ஸ்வபாவம் அதிகாரிகளுக்கு இல்லை. ஆனால் அதைப் பேச்சுமூச்சின்றி அடக்கவே அவர்கள் முற்படுகின்றனர்.

"இந்தியாவுக்குச் சீர்திருத்தங்கள் நிதானமாகக் கிட்டலாம்; ஆனால் அவை கிடைப்பது நிச்சயம். அதிகாரிகள் அவற்றை எதிர்த்து நிற்கலாம். துரைத்தனத்தாருக்கு எவ்வளவு பலம் இருந்தாலும், மக்கள் வேண்டும் சீர்திருத்தங்களை நிரந்தரமாகத் தடைப்படுத்த முடியாது. அதை இடைமறிக்கப் பார்க்கலாமே தவிர, வேறு ஒன்றும் செய்ய முடியாது?"

இதே தஸ்தாவேஜியில் மணி ஐயர், அரசாங்கத்தார்

பிரித்தாளும் கொள்கையை மேற்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

> "காங்கிரஸ் இயக்கம் ஆரம்பமானபோது, அதற்கு எதிராக இந்திய முஸ்லிம்களைக் கிளப்பி விட்டனர். அந்த வகுப்பாருக்கு அடிக்கடி பல சலுகைகளை அளித்து இருவகுப்பாருக்கும் இடையே பிளவைப் பெரிதாக்கினர். இப்போது இவ்விரு வகுப்பாரும் ஒன்றுபட்டு, ஒரே திட்டத்தை மேற்கொண்டிருப்பதால், தென்னிந்தியாவில் ஹிந்துக்களிடையே பிளவை உண்டுபண்ண முயற்சி நடப்பதை நாம் இச்சமயம் காண்கிறோம்."

தம் மனத்தில் இருப்பதை மிகவும் தைரியமாகவே இவர் எடுத்துரைத்தார். இந்தியா மந்திரியின் வாக்குறுதியையும் இவர் பெரிதாகக் கருதவில்லை. பொது மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளாததும், அவர்களது அன்பு பெறும் தகுதியற்றதுமான அதிகார வர்க்கத்தின் ஆதிக்கம் நீடிக்கும் வரையில் நாட்டுக்கு நன்மை இல்லை என்பதை ஒளிமறைவின்றி இவர் எடுத்துக்கூறினார். நிர்வாகத்தில் ஜனப் பிரதிநிதிகளுக்கு அதிகப் பங்கு அளிக்கப்பட்டால்தான் அரசியல் முறை சோபிக்கும் என்று இவர் தெரிவித்தார். ராஜப்பிரதிநிதி அடிக்கடி இந்தியா மந்திரியை ஆலோசித்து முடிவு பண்ணும் வழக்கத்தை இவர் ஆக்ஷேபித்தார். ராஜப்பிரதிநிதி பதவிக்கு ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்களையே நியமிப்பதை இவர் ஆதரித்தார்.

இந்த யாதாஸ்தை சமர்ப்பித்தபின்பு இவர் இந்தியா மந்திரியுடனும் ராஜப்பிரதிநிதியுடனும் சிறிதுநேரம் சம்பாஷித்தார். மாண்டேகு துரை தமது "இந்திய

டயரி"யில் எழுதியிருப்பது இந்தச் சந்தர்ப்பத்தில் படிக்கத்தக்கதாகும்.

"இந்தியாவுக்குச் சுய ஆட்சி வாங்கிக்கொடுக்கும்படி ஒரு கடுமையான கடிதத்தை ஜனாதிபதி வில்ஸனுக்கு எழுதிய வயசு முதிர்ந்த மாஜி ஜட்ஜான சுப்பிரமணிய ஐயர் என்னுடன் பேசினார். அந்தக் கடிதத்தில் பிரிட்டிஷ் ஆட்சியைப்பற்றி அவர் குறிப்பிட்டிருந்ததை நான் பலமாகக் கண்டித்தேன். நான் அதிக ஆத்திரத்துடனும் மிக்க கோபத்துடனும் அவரிடம் பேசியதால், அவர் என்னைப்பற்றி இனி நல்ல அபிப்பிராயம் கொள்ளமாட்டார். என்னுடைய பிரசங்கங்களைத் தொகுத்துப் பிரசுரித்தவர் அவர்தாம்! ஆனால் அவர் எழுதிய வாக்கியங்கள் அவமானகரமானவை. மகியவல்லி, லிஹன்சங், அப்துல் ஹமீத் முதலியவர்கள் ஒன்றுசேர்ந்தாலுங் கூட அவர்களைத் தோல்வியுறச் செய்யும் புத்திக் கூர்மையும் நுட்ப அறிவும் இந்திய ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தரிடம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்; அதுவே அவரது கருத்து எவ்வளவு விநோதமானது என்பதை வெளியாக்குகிறது. இதை எழுதியவர் பென்ஷன்பெறும் நீதிபதி. இப்பேர்ப்பட்டகருத்துக்கொண்டவர் இத்தகைய ஸர்க்காரிடம் வேலை பார்த்திருந்திருக்கக் கூடாது என்று நான் அவரிடம் தெரிவித்தேன். அவருக்கு வயசு அதிகமாகிவிட்டது; தளர்ச்சியும் மிகுதி. அவரை அதிகக் கடுமையாக நடத்திவிட்டேன் என்றே நான் நினைக்கிறேன். அப்போது எனக்கிருந்த கோபத்திற்கு அளவே இல்லை." (பக்கங்கள் 123-124)

இவ்விதம் நடத்தப்படுவதை மணி ஐயர் சிறிதும்

எதிர்பார்க்கவில்லை. சீர்திருத்தத்தைப்பற்றி விவாதிக்கச் சென்ற இடத்தில், கடிதம் எழுதியதற்காகத் தம்மைக் கடிந்துகொள்வர் என்று இவர் முன்னமே அறியார். ஆயினும் பதில் கூறுமல இருக்கவில்லை. இதனால் தமது ராஜவிசுவாஸம் குறைந்துவிட்டதாகக் கூறுவது தகாது என்றார்; தமது கடிதத்தில் குறிப்பிட்ட குறைகளை நிரூபிக்கத் தம்மிடம் போதிய ஆதாரங்கள் இருப்பதாக இவர் அச்சம் சிறிதுமின்றித் தெரிவித்தார்.

இதற்கப்புறம், இந்தக் கடிதம் சம்பந்தமாகத் தாங்கள் மேற்கொண்டு ஒன்றும் செய்யப்போவதில்லை என்று இந்திய அரசாங்கத்தார் இவருக்கு அறிவித்து விட்டனர். 1918-ஆம் வருஷம் ஜூன் மாதம் 3-ந் தேதி காமன்ஸ் சபையில் நடந்த விவாதத்தில் ஹிக்ஸ் என்ற அங்கத்தினர் ஒருவர் கேட்ட கேள்விக்கு மாண்டேகு துரை, "இந்த அவமானகரமான கடிதம், மிகவும் ஆக்ஷேபகரமானது என்பதை அதை எழுதியவரது ஸ்திதியைக் கவனிக்கையில் தெரியவரும்" என்று பதில் தந்தார். பிறகு ஸர், ஜே. டி. ரீஸ், "இந்தக் கடிதத்தை எழுதியவருக்கு 77 வயசாகிவிட்டது என்பதும், எழுதியதற்கு வயசு முதிர்ச்சியால் மூளை பலஹீமடைந்து விட்டதே காரணம் என்பதும் ஸ்ரீ மாண்டேகுவுக்குத் தெரியுமா?" என்று வினவினார். இந்த வினாவிடைகளை யொட்டிச் சென்னைப் பத்திரிகை யொன்று மணி ஐயரைப் பலமாகத் தாக்கி எழுதியது. இதற்காக இவருடைய "ஸர்" பட்டத்தை ஸர்க்கார் பிடுங்கிவிடவேண்டும் என்றும் அது யோசனை சொல்லிற்று.

பட்டத்தைப் பெரிதாக மதிப்பவர் அல்லவா இவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டிருப்பர்? அம்மாதம் 15-ஆந் தேதியன்று இவர் உடனே பத்திரிகை

களுக்குத் தாம் கடிதம் அனுப்பியது முதற்கொண்டு அன்றுவரை நடந்தவற்றை ஆதியோடந்தமாக விவரித்தெழுதினார். தாம் பட்டம் பெற்றிருப்பதால் அநியாயத்தை ஆக்ஷேபிக்கத் தமக்கு அதிகாரம் இல்லை என்று கூறுவது ஆதாரமற்றது என்றார். ஒருவருடைய நியாயமான உரிமைகளைத் தடுப்பதற்குப் பட்டங்கள் காரணமாக இருக்குமாயின், அவற்றை ஏற்றுக்கொள்ளாமலிருப்பதே கண்ணியமான முறை என்று இவர் கூறினார். தமக்குக் கிடைக்கும் பென்ஷன் தொகை தமது தாய் நாட்டின் பொக்கிஷத்திலிருந்தே கொடுக்கப்படுவதாகவும், பார்லிமெண்ட் ஒருசட்டம் இயற்றினால்தான் அதை நிறுத்தமுடியும் என்றும் இவர் பதில் அளித்தார், "எனது பிரஜா உரிமையை இழப்பதைவிட, பென்ஷனை இழக்கவும் நான் தயார்" என்றும் இவர் எழுதினார். தம்மைப்பற்றி ஸர் ஜான் ரீஸ் கூறியதையும் இவர் மறுத்தார்.

அதே மாதம் 20-ந் தேதியன்று மணி ஐயர் மற்றுமொரு காரியத்தையும் துணிந்து செய்தார். தமது "திவான் பஹதூர்", "ஸர்" என்ற பட்டங்களுக்குரிய சின்னங்களைச் சென்னை ஸர்க்கார் பிரதம காரியதரிசிக்கு இவர் திருப்பியனுப்பிவிட்டார். இனி அப்பட்டங்களைத் தமது பெயருக்கு முன்போ பின்போ உபயோகிக்கக்கூடாதென்றும் பத்திரிகை மூலமாகத் தம் நண்பர்களுக்கு இவர் அறிக்கை விடுத்தார். இம்மாதிரி முதல் முதல் பட்டங்களைப் புறக்கணிக்கும் பழக்கத்தை ஆரம்பித்தவர் மணி ஐயர்தாம். அப்போது நாட்டில் இந்தத் தீரச் செயல் எதிர்பாராத உணர்ச்சியை உருவாக்கிவிட்டது. ஹிமயம் முதல் கன்யாகுமரி வரை மணி ஐயரைப் பொது மக்கள் பாராட்டினர்; இவரது சுதந்திர உணர்ச்சியையும்

சுயமரியாதையையும் போற்றினர்; இவரைக் காட்டிலும் மேலான தியாகி புவியில் இருக்கமுடியாது என்றும் மனமார வாழ்த்தினர்.

இதற்கிடையில் தென்னாப்பிரிக்காவிலிருந்து தாயகம் திரும்பிய மகாத்மா காந்தி சம்பாரானில் நடத்திய சத்தியாக்கிரஹம் இவரது கவனத்தைக் கவர்ந்தது. காந்திஜி மேற்கொண்ட முறையை இவர் மிகவும் மதித்தார். இதே மாதிரி பிறரும் பாடுபட்டால் மகத்தான பலன் பிறக்கும் என்றார். மகாத்மாஜியிடம் இவர் கொண்ட மதிப்பு. 1915-இல் அவர் சென்னைக்கு விஜயஞ் செய்த சமயம் இவர் தமது வரவேற்புரையில் வெளியிட்ட வாக்கியங்களின் மூலம் புலனாகின்றன.

"காந்திஜியின் வாழ்க்கை விவரத்தைப் பல நாட்டு மொழிகளிலும் இனிது எழுதி அவற்றை எல்லோருக்கும் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். இந்தத் தேச பக்தர் இனிச் செய்யவிருக்கும் கைங்கர் யத்திற்கு, இவர் இதுவரையில் செய்தது சூசகமாகும். இவர் ஆத்ம சக்தியின் அவதாரம். நியாயவாதியின் நுட்ப அறிவும் யோகியின் நிர்மல நடத்தையும் அமைந்த இவர் அரசியல் விஷயங்களிலும் நல்ல சமர்த்தர். இவரது உயர்ந்த சக்தியின் முன்னிலையில், ஸாம்ராஜ்யத்தின் சக்தியும் சிதறிப் போயிற்று. காந்திஜி தமது காரியத்தை ஆரம்பித்துச் சிறப்பாக நிறைவேற்றுவார் என நான் நம்புகிறேன்." (21-4-1915)

இந்த வாக்கியங்களிலிருந்து மணி ஐயரின் தீர்க்க தரிசனம் தெளிவாகிறது. இதற்குப் பிறகு நிகழ்ந்த சம்பவங்களைச் சிந்தித்துப் பார்க்கும்போது, இவர்

கூறியவை எத்தகைய சிறப்பு வாய்ந்தவை என்பதும் தெரிகிறது.

இது நிற்க; ஹோம் ரூல் இயக்கத்திற்கு மணி ஐயர் தலைமை வகித்ததால், இவரது புகழ் நாடு முழுவதும் பரவிவிட்டது. 1917-ஆம் வருஷக் காங்கிரஸ் மஹா சபையின் தலைமைப் பதவிக்கு இவரது பெயரும் சிபார்சு செய்யப்பட்டது. இதை யறிந்ததும் இவர் அவசரம் அவசரமாகப் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை அனுப்பினார். தலைமை ஸ்தானத்திற்குத் தகுதியுள்ளவர் ஸ்ரீ பெஸண்ட்தான் என்றும், ஆகவே அவரைப் பொறுக்கி யெடுப்பதே பொருந்தும் என்றும், தலைமைப் பதவி தமக் களிக்கப்பட்டாலும் ஸ்ரீ பெஸண்டின் சார்பில்தான் அதைத் தாம் மேற்கொள்ள முடியும் என்றும் இவர் தெரிவித்தார். இதன் காரணமாகத் தலைமைப்பதவி பெஸண்டுக்கே கிடைத்தது.

லோகமான்ய திலகர் தலைமையில் இங்கிலாந்துக்குச் சென்ற தூதுக் கோஷ்டியார் 1918-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ஆந் தேதி சென்னைக்கு வந்தனர். அப்போது அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. மணி ஐயர் இக்கூட்டத்திலும் பிரதான புருஷராக விளங்கினார். அந்தச் சமயம் இவர் திலகரும் காந்திஜியும் நாட்டிற்கு ஆற்றிவரும் தொண்டைப் பாராட்டினார். பிறகு ஒரு சமயம் புதிய சீர்திருத்தங்களைப்பற்றி சொல்லுகையில், "அதிகாரிகள் நமது கௌரவத்திற்குக் குறைவான அதிகாரத்தை நமக்குக் கொடுத்தால் அதை ஏற்பதைவிட நிராகரிப்பதே உசிதமாகும்" என்றார் இவர். "நமது உரிமையை நமக்கு அளிக்கும்படி நாம் அவர்களை வற்புறுத்த வேண்டும். காங்கிரஸ் - லீக் கோரிக்கைக்குக் குறைந்தபக்ஷமான உரிமையையும் நாம்

ஒப்புக்கொள்ளக் கூடாது" என்று இவர் மேலும் தெரிவித்தார். மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத் தங்கள் வெளி வந்ததும் மணி ஐயர் அவற்றைக் கண்டித்தார். அவை இந்தியர்களது அவாவைப் பூர்த்தி பண்ணவில்லை என்றும் கூறினார். ரவுலட் சட்டம் பிறப்பிக்கப்பட்டபோது, மணி ஐயர் முதல் முதலில் அதைப் பலமாக ஆக்ஷேபித்தார்.

இதற்கப்புறம் மணி ஐயர் பொது வாழ்வில் அதிகப் பற்றுதல் கொள்ள இயலவில்லை. தேகத் தளர்ச்சியும் வயிற்று வலியும் இவரை அந்திய காலத்தில் துன்புறச் செய்தன. கிண்டியில் இருந்த தமது இல்லத்திலேயே இவர் தமது வாழ்நாள் முடியும்வரை தங்கியிருந்தார். 1924-ஆம் வருஷம் டிஸம்பர் மாதம் 5-ஆந் தேதியன்று காலை, டாக்டர் மணி ஐயர் தமது 82-ஆவது பிராயத்தில் தேகவியோகமானார். நிரம்பிய வாழ்க்கை முடிவடைந்தது; புகழ் நிறைந்த ஒரு பேரறிஞரின் சரித்திரம் நிறைவெய்தி யது. பல துறைகளிலும் பெருமையடைந்த பெரியாரின் காலம் பூர்த்திபெற்றது. இதற்குத் தேசமே துக்கித்தது. தென்னிந்தியாவின் தொண்டு கிழவர் மறைந்தார்; ஆனால் இவரது தொண்டின் பலனை அனுபவிக்கும் பேறு நம்முடையதாகும்!

9

## உயர்வும் உபதேசமும்

சீரும் சிறப்பும் நிறைந்து சேவை செய்தவரின் வரலாறும் லக்ஷியமும் விசாரணைக்குரியவை. இவர் வாழ்ந்த விதமும் மதிப்பு மிகுந்தது. விடியற்காலையில் தவறாமல் எழுந்து நீராடுவது இவரது வழக்கம். பிறகு ஜபம் செய்வார்; மந்திர ஜபத்தில் இவர் விசேஷ நம்பிக்கை கொண்டிருந்தார்; தமது உபாஸனா மூர்த்தியான ஸ்ரீ வேணுகோபாலரின் மந்திர ஜபத்தை நெடு நேரம் இருந்து செய்வார். பிற்காலத்தில் சுத்த தர்ம மண்டலத்தை ஸ்தாபித்தபின் இவர் அங்கிலேயத்தார் வெளியிட்ட ஸ்ரீ பகவத்கீதைப் பதிப்புக்கு எழுதிய முகவுரை மதிப்பதற்குரியதாகும். மணி ஐயர் உண்மையான வேதாந்தி. ஒவ்வொருவரையும், அவர் வயசில் சிறியவராயினும் சரி, அந்தஸ்தில் தாழ்ந்தவராயினும் சரி, இவர் வெகு மரியாதையுடனேயே நடத்திவந்தார்; பிறரை அழைக்கும்போது, ஏக வசனத்தைப் பிரயோகிக்க மாட்டார்; தமது வீட்டு வேலைக்காரனுக்கும் மதிப்புக் கொடுத்தார். இவர் பல வருஷகாலம் தினந்தோறும் ஆயிரத்தெட்டுத் தடவை காயத்ரீ மஹாமந்திரத்தை ஜபித்து வந்தார். இவரது முக விலாசத்திற்கும், வதனத்தின் சோபைக்கும் இந்த ஜபமே காரணமென்பர் பலர். மணி ஐயர் மகா ரஸிகர். இவருக்குச் சங்கீதத்தில்

இருந்த விருப்பமும், அழகுக் கலையில் இருந்த சிரத்தையும் அளவிட முடியாதவை.

ஏழை எளியவர்களிடம் இவர் காட்டிய அன்பு மிகவும் உன்னதமானது. பிறருக்கு எட்டக்கூடாத பெரிய பதவியை வகித்தபோதும், இவருக்கு மமதை இல்லை; தமக்குக் கிடைத்த உயர்ந்த ஸ்தானம் தாம் பிறருக்கு உபயோகப்பட வேண்டும் என்பதற்காகத்தான் என்ற கருத்துடன் வாழ்ந்தவர். இவர் செய்துவந்த உபகாரச் செயல்கள் மிகச் சிறந்தவை; நல்ல தாராள மனசு படைத்தவர்; தயக்கமின்றி உதவும் இயல்புடையவர். தமது வலது கை கொடுப்பது இடது கைக்கும் தெரியக் கூடாத விதத்தில் நடந்துகொண்டவர். அநேகரை ஆதரித்தார். தம் ஆயுள் உள்ள அளவும் காப்பாற்றினார்.

ஹைகோர்ட்டில் இவர் நீதிபதியாக இருக்கையில், பெரிய குடும்பியான பங்கா இழுக்கும் கிழவன், தனது கஷ்டம் காரணமாக அழுக்கடைந்த உடைகளையே அணிந்து வந்தது மற்றொரு நீதிபதியின் கவனத்தைக் கவர்ந்தது; அவன் கிழவன் என்ற வியாஜத்தைக்கொண்டு அவனை வேலையிலிருந்து விலக்கிவிடும்படி அவர் ரிஜிஸ்திராருக்கு உத்திரவிட்டு விட்டார். உடனே அந்த ஏழைக் கிழவன் இவரிடம் வந்து முறையிட்டான்; அவனது கஷ்டத்தின் தன்மையை அறிந்து அவனைத் தமக்குப் பங்கா இழுப்பவனாக இவர் அமர்த்திக்கொண்டார் இத்தகைய குணாதிசயம் எவ்வளவு பேருக்கு உண்டு? தம்மிடம் வந்து இரப்பவர்க்கு இல்லை என்றதே இல்லை இவ்வுத்தமர். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பலர் வந்து இவரிடம் பணம் பெற்றுக்கொண்டு போவார்கள். இவர் உதவிய உபகாரச் சம்பளத்தைப் பெற்றுப் படித்தவர் அநேகர்.

ஜபம் முதலியவற்றை முடித்துக்கொண்டபின் தமது உத்தியோக அறைக்கு வந்து இவர் தமது அலுவலைக் கவனிப்பார். தம்மைக் காண வந்திருப்பவர் ஒவ்வொருவரிடமும் தக்கபடி பேசி அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்புவார். காலத்தை வீணாக்கமாட்டார். காலத்தை வரையறை செய்துகொண்டு அதன்படி நடக்கும் சிறப்பு இவருக்குத்தான் பூரணமாக உரியதாகும். இவரது தினசரியைக் கண்டவர் வியக்காமல் இருக்க முடியாது. கடிகாரம் பிசகினாலும் பிசகலாம்; ஆனால் மணி ஐயரின் வேலை குறிப்பிட்ட காலத்தில் நடந்தே தீரும். எந்தக் காரியத்தையும் இவர் பல நாட்களுக்கு முன்பே ஆராய்ந்து முடிவு பண்ணிவிடுவார். இதனால்தான் இவர் பல அருங் காரியங்களை நிறைவேற்றி வைக்கமுடிந்தது.

அடக்கமும் தன்மதிப்பும் ஒருங்குடையவர் சிலரே. மணி ஐயரிடம் இவ்விரு விசேஷ குணங்களும் குடி கொண்டிருந்தன. அடக்கமென்பது தன்னைத் தானே தாழ்வுபடுத்திக்கொள்வது அல்ல; தன்னைப்பற்றி வீண் பெருமை கொள்வது தன்மதிப்பு ஆகாது. சிறு பிராயத்திலேயே மணி ஐயர் தமது சுயமதிப்பைக் காட்டினார். மதுரைக் கலெக்டராபீஸில் அஸிஸ்டென்ட் கலெக்டர் ஸ்ரீ க்ரோல் ஒருநாள் இவரைத் தமது அறைக்கு வருவித்தார். இவரை உட்காரச் சொல்லாமல் பேசிக் கொண்டே போனார். இத்தகைய அவமரியாதையை இவர் சகிக்கவில்லை. சற்றுப் பொறுத்துப் பார்த்தார். கடைசியில் எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மேலும் பதில் தந்தார் இவர். அதிகாரிக்குக் கோபம் பொங்கி எழுந்தது. பலன் இல்லை.

ஒருநாள் வேடிக்கையாக இவரும் ராமநாதபுரம் ஜமீன் மானேஜரான ஸ்ரீ பொன்னுஸ்வாமித் தேவரும்

சம்பாஷித்துக்கொண் டிருந்தனர். அப்போது ஸ்ரீ தேவர் இவரைப் பார்த்து, "எல்லோரும் மணி மணி என்கிறீர்களே, ஆனால் சப்தத்தை மட்டும் காணோமே!" என்றார். இவர் இதற்குத் தகுந்த விடை தரத் தயங்கவில்லை. "எல்லோரும் பொன்னு, பொன்னு என்கிறீர்களே; ஆனால் பிரகாசத்தை மட்டும் காணோமே!" என்று சொன்னார். சந்தர்ப்பத்திற்குகந்த பதில்; சூடான பதில். ஆயினும் சிரித்துக்கொண்டே இருவரும் பின்பு இடத்தைவிட்டகன்றனர்.

நம் முன்னோர் நிர்ணயித்து வைத்த தர்மத்திலும், அவர்கள் வகுத்துக்கொடுத்த ஆசார முறைகளிலும் மணி ஐயருக்கு அதிகப் பற்று உண்டு. மேல்நாட்டு நாகரிகத்தைப் பின்பற்றி, நமது உடுப்பை நாம் மாற்றிக்கொள்ளக் கூடாது என்பது இவரது கருத்து.

> "நமது உள்ளத்திலிருப்பதை உண்மையாய்ப் பிரதிபிம்பிப்பது நமது உடைதான். நீங்கள் தேசிய வாதிகளாயிருக்கும் பக்ஷத்தில், நம் தேசத்திற்கு உகந்த ஆடையையே அணியுங்கள். தூய்மையான வெள்ளை வேஷ்டியும், நம்மவர் நெய்த துணியாலான ஷர்ட்டும் நம்மை அழகுபடுத்தப் போதும்! அவை மிகவும் மலிவானவை. உடுப்பு விஷயத்தில் உண்மையான சுதேசியத்தைப் பின்பற்றுங்கள்."
>
> (1916-ஆம் வருஷம் டிஸம்பர் மாதம்.)

நம் நடையுடை பாவனைகளைக் கொண்டே நம்மைப் பிறர் மதிக்கின்றபடியால், நாம் நமக்குப் பெருமையும் கௌரவமும் விளைவிக்கும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என்றார் இவர். சிறிய காரியமாயினும், அதைச் சரிவரச் செய்து முடிக்கக் கற்பதே சிறந்தமுறை என்பது

இவரது கொள்கை. இயற்கையன்னையைத் தொழுவது மிகவும் இனிமையானது என்று இவர் கருதினார்.

"வயசில் பெரியவர்களிடம் மரியாதையும், மதிப்பும், பக்தியும் கொள்ளவேண்டும்; சமமானவர்களிடம் அன்பும், சகாய புத்தியும் காட்டவேண்டும்; வயசிலும் அந்தஸ்திலும் குறைந்தவர்களிடம் பரிவு, தயாளம், பச்சாத்தாபம், சகிப்புத்தன்மை முதலியவற்றை நிரூபிக்க வேண்டும். உண்மையைப் பேசுங்கள்; ஆனால் படபடப்பில்லாமல் வினயமாக இருப்பதே நலம்; ஆக்ஷேபத்தைத் தெரிவிக்கும்போதும் ஆத்திரம் காட்டாமல் கௌரவமாக நடவுங்கள். வெறுக்கத்தக்க வார்த்தைகளையும், வெறுப்புக்குரிய வாதங்களையும் விலக்கித் தள்ளுங்கள்; பிறர் கோபம் மூட்டுவதற்கு இடம் கொடுக்காதீர்கள். சாந்தமாகவே நடந்துகொள்ளுங்கள்."

(1916-ஆம் வருஷம் டிஸம்பர் மாதம்.)

மாணவர் சமூகத்தில் இவர் வெளியிட்ட மேற்குறிப்பிட்ட வாக்கியங்கள் இவரது நீண்ட அனுபவத்திலிருந்து உதித்தவை. வாழ்க்கைத் துறையில் இவர் கண்ட உண்மைகளே இவை

சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் இவர் செய்த உபதேசம் உள்ளத்தில் பதியவேண்டியதாகும். உயர் தரப் படிப்புப் பெற்றவர்களின் கடமை என்ன? பெரிய படிப்புக் கிடைத்துவிட்டதே வாழ்க்கையில் பிரகாசிக்கப் போதுமா? தங்கள் வேர்வை பூமியில் சிந்தும்படி வேலை செய்வதால் பட்டதாரிகளின் பெருமைக்குப் பங்கம் ஏற்படுமா? - இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் மணி ஐயர் தக்க பதில் தந்தார். பரீக்ஷையில் முதன்மையாகத்

தேறிய பலர் பிற்காலத்தில் பிரகாசிக்கவில்லை என்பதையும் இச்சமயம் புலப்படுத்தினர்.

' கலாசாலையில் நன்றாகப் படித்துத் தேறுவது மட்டும் போதாது. பிற்காலத்திலும் படித்துக் கொண்டே இருப்பதுதான் பயன் தரும். உயர்தரக் கல்வியை நாம் கற்றுவிட்டோம் என்ற எண்ணத்தால், சாமான்ய வேலையைச் செய்வது தகுதியன்று என்று ஒருவரும் கருதலாகாது. இக்காலத்துக் கல்விமுறை காரணமாக, தேக உழைப்பைப் பிரதானமாகக் கொண்ட சிறு தொழில்களைச் செய்வது இழிவானது என்ற கருத்து, பலருக்கு இருக்கிறது...ஒவ்வொரு வருஷமும் தேர்ச்சிபெறும் பட்டதாரிகளின் தொகையைக் கவனிக்கும்போது, கூடிய சீக்கிரத்திலேயே அவர்கள் பலதிறப்பட்ட எளிய வேலைகளில் நிச்சயமாக ஈடுபடவேண்டிநேரும் எனத் தெரியவரும். நாளடைவில் படிப்பிற்கு மதிப்புக் குறையும்; நமக்குத் தகுந்த வேலை கிடைக்கவில்லையே என்று அப்போது குறைகூறுவது விவேகமாகாது. புத்திசாலிகளா யிருப்பவர்கள் அப்போது எந்தக் கண்ணியமான தொழிலையும் மேற்கொள்ள முன்வருவர்; கற்ற கல்விக்கும் தொழிலுக்கும் பொருத்தமில்லையே என்ற எண்ணம் கூடாது. நம் நாட்டில் உதித்த மேதாவிகள் பலர், தங்கள் தேக சிரமத்தைப் பொருட்படுத்தாது வேலை செய்து வாழ்ந்திருக்கின்றனர்...ஆகவே நம் பள்ளிக்கூடங்களில் நாள்தோறும் ஒவ்வொரு மாணவரும் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் கைத்தொழிலில் பயிற்சி பெறவேண்டும் என விதித்தால் அது நற்பயனை விளைவிக்கும். அப்போதுதான் தேக

உழைப்பினால் தோஷம் இல்லை என்பதும், அதுவும் நமக்கு வேண்டியதுதான் என்பதும் மாணவர்களுக்குத் தெரியவரும். கண்ணியமான உழைப்பு, தங்களது கௌரவத்திற்குக் குறைவானது என்று கருதுபவர்கள் நம் சமூகத்திற்கும் கல்விமுறைக்கும் கேட்டையே விளைவிக்கின்றனர். இவ்வாறு செய்தால் நாம் முற்போக்கு அடையமுடியாது. படித்துத் தேர்ச்சியடைந்தவர்கள் இதுவரையில் 'பின்பற்றப் பட்டுவந்த உத்தியோக பந்தாவை விட்டுவிட்டு, புதிய தொழில் முறைகளை ஆரம்பிப்பதில் கவனம் காட்டினால், தொண்டு புரிபவர்களுக்கு லாபகரமான புதிய வழிகள் புலப்படுவதுடன், காலக் கிரமத்தில் சமூகத்திற்கும் நன்மையே கிட்டும்.”

காலத்திற்கு ஏற்ற கல்வி முறையின் அவசியத்தை இந்தத் தீர்க்கதரிசி அன்றே வற்புறுத்தினார். பிற்காலத்துச் சுகவாழ்வை உத்தேசித்தே பள்ளிக்கூடப் படிப்பு அமையவேண்டும் என்று இவர் உபதேசித்தார். இக்கால நிலைமையையும், நாட்டில் இப்போது பரவிவரும் பிரசாரத்தையும் பார்க்கும்போது, பல ஆண்டுகளுக்கு முன்னமேயே இவர் கூறியமொழிகளின் உண்மை எவ்வளவு நிரந்தரமானது என்பது தெரியவரும். “மணி ஐயர், பெரிய பதவி வகித்துவிட்டார். தேக உழைப்பு அவசியம் என்று ஏன் அவர் மற்றவர்களுக்கு உபதேசிக்கமாட்டார்? பிறருக்குப் போதனை செய்வதில் என்ன கஷ்டம்?” என்று சிலர் கேட்கலாம். ஆனால் மணி ஐயரின் இயல்பையும் லக்ஷியத்தையும் அறிந்தவர்கள் இந்தக் கேள்விக்கு இடம் கொடுக்கமாட்டார்கள். மணி ஐயர் உயர்தரக்கல்வி பயின்ற நாளில் போட்டி இல்லை. பட்டதாரிகளுக்கு ஏற்ற பதவி உடனே நிச்சயமாகக் கிடைத்துவந்தது

கண்மூடித்தனமாக எல்லோரும் கலாசாலைப் படிப்பில் மோகம் கொண்டதனால் அதன் மதிப்பு மங்கி விட்டது. ஒரே துறையில் எல்லோரும் பிரவேசித்ததால் குமாஸ்தாக்களின் தொகை அதிகரித்ததுதான் கண்ட பயன். பட்டதாரிகள் பெருகப் பெருக அவர்களுக்கு ஏற்றபடி புதிய தொழில்முறைகளை வளர்க்க ஒருவரும் வழி காணவில்லை. மணி ஐயர் பல வருஷங்களாகத் தாம் நேரில் கண்டதையே மாணவரிடம் தெரிவித்தார். அதற்குப் பரிகாரத்தைக் கண்டுபிடித்தும் கூறினார். பணமும் பெருமையும் பெருகவேண்டும் என்ற ஆசையுடன் தொழில்புரிவதை இவர் கண்டித்தார். மன மொப்ப ஊழியம் புரியவேண்டும் என்பதே இவரது கொள்கை. மேற்கொண்ட தொழிலைத் திறம்பட நடத்துவது மட்டுமே படிப்பின் லக்ஷியமாகாது என்றும், கௌரவ வாழ்க்கைக்கான வழியை அறிந்து அவ்விதம் நாம் நடக்க உதவுவதே அதன் பிரதான நோக்கம் என்றும் இவர் தெரிவித்தார். ஒவ்வொருவரது நடத்தையும் களங்கமின்றி இருக்கவேண்டும் என்பதை இவர் வற்புறுத்தினார். "மனிதனுக்கு மனிதன் இருக்கும் வித்தியாசம் பணத்திலும் புத்தியிலும் சுற்றுப்புற ஸ்திதியிலும் மட்டுமல்ல. அவர் அவர் ஒழுக்கத்தில்தான் அது இருக்கிறது" என்றார்.

"உன்னத பதவிக்கு ஆசைப்படுங்கள். உங்களுக்குச் சாத்தியமான அளவுக்குமேல் ஆசை வைக்காதீர்கள். எது நேர்ந்தாலும் கண்ணியமான முறையை மட்டும் கைவிடாதீர்கள். நன்னடக்கமும், சுயநல மறுப்பும், வருங்கால நன்மையைக் கருதி நிகழ்கால சுகத்தைக் கைவிடுவதுந்தான் இஷ்ட சித்திக்கான வழிகள்."

சாந்தியும் சந்துஷ்டியும் நிறைந்த வாழ்க்கைக்கு இவை தவிரச் சகிப்புத் தன்மையும் அவசியம் என்பதே மணி ஐயரின் சித்தாந்தம். பரிவும் பாரபக்ஷமற்ற புத்தியும் பிரதானமாகப் பொருந்தி யிருக்கவேண்டும் என்றும், இன்றேல் வாழ்க்கை பயனற்றுப்போகும் என்றும் இவர் கருதினார்.

"எல்லாப் பிரச்னைகளிலும் பிறர் கருத்துகளுக்கும் இடம் கொடுங்கள். நம்மைவிட மற்றவர்கள் மேலானவர்கள் என்ற மனநிலை மேலிட வேண்டும். வாய்ப்பேச்சைவிட வேலையே பெரிதென்றும், கொள்கையைவிடக் கடமையே முக்கியம் என்றும் நீங்கள் பதிக்கவேண்டும். எதிலும் உட்புகுந்து ஆராயும் வழக்கத்தை அதிகமாக வளர்க்காதீர்கள். பிறரிடம் உள்ள குணத்தைக் காண மறுப்பதும் அவர்களிடம் இருக்கும் குறையையே காணும் ஸ்வபாவமும் தீங்கானவை. ஒருவர் ஒரு நன்மையைச் செய்வதற்கு அவருடைய சொந்த லாபமே காரணம் என்று கற்பிக்கும் கெட்ட மனோபாவத்தையும் புறக்கணியுங்கள். கெட்டதை மறந்து நல்லதையே காண்பது வாழ்க்கையை ரஸிக்கச்செய்யும். நிரந்தரமான சந்தோஷத்திற்குத் தாராளமான புத்தி அவசியம். மானிடவர்க்கத்தின் க்ஷேமத்தை உத்தேசித்து நாம் கற்ற கல்வியை உபயோகிப்பதால் ஏற்படும் திருப்தி அளவிடமுடியாதது."

வயசேறியும் சிலருக்கு வாலிபப் பருவம் மறையாததன் மர்மத்தையும் மணி ஐயர் மாணவர்களுக்குப் புலப்படுத்தினார். அந்தியகாலம் வரையில் வாழ்க்கையில் வெறுப்புத் தட்டாமல் இருக்க வேண்டுமாயின் செய்ய வேண்டியது யாது?

" தகாத தொழில்கள், கீழ்த்தர உணர்ச்சிகள், அடக்கிவைக்கப்படாத சுயநல புத்தி, சிந்தனைசக்திக் குறைவு, லக்ஷியமற்ற வாழ்க்கை-இவைதாம் மனிதர் விரைவில் முதுமையை அடைவதற்குக் காரணம். ஆனால், ரஸிக்கும் மனப்பான்மை, இயற்கையிலும் செயற்கையிலும் சௌந்தரியத்தைக் கண்டு மகிழும் ஸ்வபாவம், சதா துறு துறு வென்று வேலை செய்வது, ஆகிய குணாதிசயங்கள் தேகம் தளர்ச்சியடைந்த காலத்திலும், அவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டுகின்றன. இவ்விதம் நல்வாழ்க்கை நடத்துபவர்களுக்குத்தான் சத்தியசோதனை சாத்தியம். இத்தகையவர்களால் உலகத்திற்கும் மானிட வர்க்கத்திற்கும் இறுதியில் பெரிய நன்மை உண்டாகிறது. முற்காலத்தில் நம்மிடையே இத்தகைய சத்திய புருஷர்கள் இருந்து நம் நாட்டைப் பெருமைபடுத்தினர்."

மதபக்தி மேலிட்டுப் பாரமார்த்திக விசாரம் அதிகரித்தால், சமூகத்தின் எதிர்காலம் சோபிக்கும் என்பதை இவர் சுட்டிக்காட்டினார். நம் முன்னோர் விட்டுச் சென்ற விலையிலாச் செல்வங்களுள் மதப்பற்றே முதன்மையானது என்பதையும் இவர் கோஷித்தார். தாம் செய்த உபதேசத்தின் சிறப்பை இவர் தமது வாழ்க்கையிலேயே புலப்படுத்தினார். கருத்தும் செயலும் வேறுபாடின்றி இருக்கமுடியும் என்பதற்கு இவரது வாழ்வே வழிகாட்டிவிடும். உள்ளும் புறமும் ஒருமித்து உழைக்கவேண்டும் என்பதற்கும் இவரே நமக்கு உதாரணமானவர். சிறப்பானது சேவையையே தழுவியிருக்கிறது; பரந்த நோக்கமே பெருமைக்கு அஸ்திவாரம்; பரோபகாரமே புருஷ லக்ஷணம்

இவற்றின் உண்மையை இந்த மஹானின் வரலாற்றின் மூலம் நாம் உணரலாம். மணி ஐயர் நீண்டகாலம் வாழ்ந்திருந்தவர். இவர் நம் நாட்டுக்காற்றிய தொண்டும் நீடித்து இருந்தது; வயசு முதிர்ந்த காலத்திலும் தமது தேகசுகத்தைப் பெரிதாக இவர் மதிக்கவில்லை; மக்களுக்குச் சேவை புரிவதே தமக்குச் சந்தோஷமளிப்பதாகக் கண்டார்; நமது தர்மத்திலும் ஆசாரத்திலும் மிக்க பற்றுடையவராக இருந்தார்; அவற்றின் புனருத்தாரணத்திற்காகவே அரும்பாடுபட்டார்.

ராஜ்ய பீஷ்மராகப் பிரகாசித்த இப்பெரியார், "ஒரு சிறுபான்மையோரின் கொடுங்கோன்மைக்கு அடங்கி நிற்காதீர்கள். ஒரு ஒறு கைத்தொழிலைக் கற்க நீண்ட காலப் பயிற்சி தேவையாக இருக்கும்போது, தேசத்தைப் பாதுகாக்கவும் அதற்கான சட்டங்களை இயற்றவும் பயிற்சி அநாவசியம் என எவராவது நினைக்கலாமா?" என மாணவர்கள் முன்பு கூறியவை இன்றும் பாராட்டத் தக்கதாகும். உத்சாக மிகுதியால் மாணவர்கள் அளவு மீறி விடக்கூடாது என்பதையே இவர் தெரிவித்தார்.

மணி ஐயர் வகுப்புவாதம் தலைவிரித்தாடுவதைக் கண்டித்தவர்; குறுகிய நோக்கத்தை வெறுத்தவர்; தேச பக்தியையே பிரதானமாகக் கொள்ளவேண்டும் என வற்புறுத்தியர்.

"பிராம்மணர்கள் அல்லது பிராம்மணரல்லாதார்கள் என்றும் ஹிந்துக்கள் அல்லது முஸ்லிம்கள் என்றும், சென்னைவாசிகள் அல்லது தஞ்சைவாசிகள் அல்லது ஆந்திரர்கள் என்றும் எவரும் பேசக் கூடாது. நாம் யாவரும் இந்தியர் என்ற உணர்ச்சியே மேலிடவேண்டும். முதலில் நாம் இந்தியர்கள்; அதற்கப்புறந்தான் மற்றப் பிரிவுகள்."

இதைக் காட்டிலும் உயர்ந்த கருத்தை எவரும் வெளியிட முடியாது. இவ்வாறு பேசுவது சுலபம். ஆனால் செயலில் செய்து காட்டுவது கஷ்டம். மணி ஐயர் பேதம் இல்லாதவர். வேதாந்தத்தின் கரைகண்டவர். எம்மதமும் சம்மதமே என்று நம்பியவர். கடவுள் ஒருவரே என்ற கருத்துக் கொண்டவர். ஆகவே மணி ஐயர் போன்ற ஞானிகளுக்கு எதுதான் சாத்தியம் இல்லை? உள்ளத்தில் உறைந்திருப்பதை உண்மையாகவே எடுத்துரைப்ப தல்லவா இவர்களது இயற்கை?

இத்தகைய லக்ஷியங்களை மேற்கொண்டு மணி ஐயர் வாழ்ந்தார். உன்னதமான கொள்கைகள் வாழ்க்கைக்கு உயர்வை அளித்தன. பிரசித்தியும் பெருமையும் தாமாகவே இவரைத் தேடிவந்தன. மணி ஐயரைக் கர்ம யோகி எனக் கூறுவது பொருந்தும்; ஞானயோகி என்று அழைப்பதற்கும் ஆக்ஷேபம் இருக்கமுடியாது. கீதா தர்மத்தைப் பலர் அறிவர். அறிந்ததை அனுபவத்தில் எவ்வளவு பேர் கொண்டுவந்திருக்கின்றனர்? மணி ஐயர் அனுஷ்டான பூர்வமான அறிவு மிகுந்தவர். இவர் தனிப் பெருமை வாய்ந்த புருஷர். ஆகவே இவருக்கு வாய்த்த புகழ் நிகரிலாதது: அது பிறர் எட்ட முடியாதது. ரானடே, கோகலே, தாகூர், காந்திஜி ஆகிய மகாபுருஷர் களுக்கே இவரை ஒப்பிடலாம். ஆதலால் இவரது பொன் மொழிகள் இளைஞர்களுக்கு நலத்தையே விளைவிப்பவை. இவரது வாழ்க்கையின் தத்துவம் நல் வாழ்வின் மேன் மைக்கு வழிகாட்டுகின்றது.

அன்பின் அகம், உண்மையின் உருவம், சீலத்தின் சிகரம், நேர்மையின் நிலையம் – இவரது குணதோஷங்களை உட்புகுந்து ஆராய்ந்தவர் இத்தகைய அரிய தோற்றத் தையே கண்டனர். வெளித் தோற்றமும் வசீகரமாகவே

விளங்கியது. அதிக உயரம் இல்லை; ஆனால் மெலிந்த உடல்; கூர்மையான கண்கள்; பிறர் கவனத்தைக் கவருபவை. நீண்ட நாசி; நுனி சற்று வளைந்தும் விகாரமில்லை. அகன்ற நெற்றி; அது ஆண்மையைக் குறிப்பிட்டது. முகம் சாந்தி மிகுந்தது; ஆனால் சண்டையில் சளைத்தவர் அல்லர் என்பதையும் அது சூசிப்பித்தது. சாத்விக சொரூபம்; திட சித்தத்தையும் தளராத உறுதியையும் ஒருபுறம் அது சித்தரித்துக் காட்டியது.

"இவரது உள்ளமும் உடையும் பரிசுத்தமானது. ஆடையில் ஒருவித அழுக்கையும் காண முடியாது. இவர் உடுத்திய மெல்லிய வேஷ்டியும் பால்போல் வெண்மையானது. தலைப்பாகைத் துணி சல்லடை போன்றது. இவை இவரது ஸ்வபாவம். இவர் சீப் ஜஸ்டிஸாக வேலை பார்க்கும்போது ஒரு சமயம் கோர்ட்டில் இவரது சொந்த அறைக்கு நான் போக நேர்ந்தது. இவர் காலை நீட்டிக் கொண்டு, ஸோபாமீது சாய்ந்திருந்தார். வெறுங் கால்களே என் கண்ணிற்குப் புலப்பட்டன. அவற்றைக் கண்டவுடன் 'தாமரைப் பாதங்கள்' என்று கூறுவதன் நினைவு எனக்கு உதித்தது. அநேக சந்தர்ப்பங்களில் அழுக்கடைந்த விகாரமான பாதங்களைப்பற்றி யெல்லாம் இவ்விதம் வணக்கத்துடன் கூறுவதும் என் ஞாபகத்திற்கு வந்தன. இவர் போன்றவர்கள் விஷயத்தில் அவ்விதம் குறிப்பிட்டால் எவ்வளவு பொருந்தும் என்று நான் உடனே எண்ணினேன்."

— ('ஹிந்து', 3-8-1935)

இவரது உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டபின், ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் 'ஹிந்து'ப் பத்திரிகையில் இவரைப்பற்றிச் சில வியாசங்களை எழுதினார்;

மேலே எடுத்துக்காட்டப்பட்ட பகுதி அவர் எழுதியவற்றி லிருந்தே பொறுக்கப்பட்டதாகும்.

திருவல்லிக்கேணியில் இருக்கும் மணி ஐயர் மண்டபமும், சென்னை ஸர்வகலாசாலை ஸெனட் ஹவுஸில் இருக்கும் இவரது உருவச்சிலையும் இவரது அருமை பெருமைகளை நினைவூட்டி வருகின்றன; இவர் காட்டிச் சென்ற வழியைப் பின்பற்றினால் நமது வாழ்க்கையும் பயன்பெறும் என்பதை அவை அறிவுறுத்துகின்றன.

முற்றும்

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS